# வக்கீல்

629

## பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

629
1-55
3




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - FEB 1955
MADRAS

பொதுமக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட நுணுக்கங்களையும் எளிய தமிழ்-நடையில் விளக்கும் மாத வெளியீடு...

**THE VAKIL • TAMIL LAW MAGAZINE**

## "வக்கீல்"

### பொது மக்களுக்கான
### உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

குறிப்பு: 'வக்லேல்'' பத்திரிகை 1949 எப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலும் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. "வககேல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய விதிகளையும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும்— தீர்ப்பும்; கேள்வி—பதில்; வரிகள்; தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.

### ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B.A., B.L.
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L.
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி B.A., B.L.,

[ஆசிரியர்]

---

### "வக்கீல்" சந்தா விபரம்

தனிப்பிரதி அணு 4. (இலங்கையில் 30 சதம்) வருட சந்தா ரூ. 3. ஷை வெளி நாடு ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதார்கள் கவனிக்கவும்:—வருட சந்தா தார்களுக்கு 12 மாத இதழ்கள் அனுப்பப்படும். "வக்கீல்" பிரசுரங்கள் என்ற தனிச் சட்டப் புத்தகங்களை வருட சந்தாதார்கள் சலுகை விலையில், அதாவது அதனதன் விலையில் ரூ. 1க்கு அணு 4 தள்ளி, பெற்றுக்கொள்ளலாம். ஆயுள் சந்தாதார்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

மானேஜர் " வக்கீல் " காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

---

### " வக்கீல் "
### (விளம்பர விகிதம்)
#### ஒரு முறை பிரசுரம் செய்ய

| | |
|---|---|
| பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்) | ரூ. 100 |
| உள் அட்டை முழுப் பக்கம் | ரூ. 80 |
| உள் பக்கம் முழுப் பக்கம் | ரூ. 60 |
| ஷை ... அரைப் பக்கம் | ரூ. 35 |
| ஷை ... கால் பக்கம் | ரூ. 20 |
| ஒரு காலம் - அங்குலம் | ரூ. 5 |

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

---

## தமிழில் சட்டப் புத்தகங்கள்

### "வக்கீல்" பிரசுரங்கள்

| | |
|---|---|
| "வக்கீல்" 1953-ம் வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை 12 இதழ்கள் செட் ஒன்று விலை .ரூ | 3 1 2 0 |
| "வக்கீல்" 1952-ம் வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள இதழ்கள் பொருள் அட்டவணையுடன் பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. | 5 8 0 |
| "வக்கீல்" 1951-ம் வருடம் பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. | 4 0 0 |
| சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் [ஒத்திப் பற்றிய புதிய திருத்தம் உள்பட விளக்கம்] ரூ. | 1 4 0 |
| தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் [புதிய சட்டம், விதிகள், நமூனக்கள், குத்தகைப் பத்திர நமூனு, வார சாகுபடிப் பத்திர நமூனு உள்பட விளக்கம்] ரூ. | 0 6 0 |
| சரக்கு விற்பனைச் சட்டம் [The Indian Sale of Goods Act] ரூ. | 1 8 0 |

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.
வி. பி. பி. கிடையாது.
அணு 8 சேர்த்து அனுப்பினல் ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும்.

கீழே கண்ட விலாசத்திற்குத் தேவையான பிரதிகளுக்கு M. O. செய்யவும்:—

**மானேஜர்,**
"வக்கீல்" காரியாலயம்,
தபால் பெட்டி 26 :: கும்பகோணம் (S.I)

*V. S. & Sons*

# SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

## வி. எஸ். & ஸன்ஸ்

## பெப்பர்மெண்டுகள்

*

தயாரிப்பவர்கள் :

**தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை,**

கும்பகோணம்.

(Estd. 1925)

நாகரீக நூதன பார்டர்களில் கண்ணைக் கவரும் மனோகரமான வேலைப்பாடுள்ள

**பட்டு ஜவுளி தினுசுகள்**

குறைந்த விலையில் கியாரண்டியுடன் கிடைக்குமிடம்:

**ராணி ரெங்கய்யர் சன்ஸ்**

**கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்**

கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு:
20, லக்ஷ்மிபுரம் 2-வது தெரு,
மதுரை.

**1006 மங்கி மார்க்**
**2066 ஸ்ரீ ஹனுமான் மார்க்**

சுத்தமான சீயக்காய்த்தூள் பாக்கெட்டுகள்

**கிருஷ்ண விலாஸ்**
**உதயகிரி விலாஸ்**

வாசனை சீயக்காய்தூள்

எண்ணெய் குளிப்பதற்கு மிகச் சிறந்தவைகள்

தயாரிப்பவர்:—

**கிருஷ்ண விலாஸ்**

336, கீழ மாசிவீதி, மதுரை.

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

**M. ஏகாம்பரம் செட்டியார்,**
புரோப்ரைட்டர்.

டிரேட்மார்க் பேடன்ட் & டிசைன் ரிஜிஸ்டர் மற்றும் காபிரைட்

விபரத்திற்கு: ரிஜிஸ்டர்

ஐ. ஸி. ஏஜன்ஸி,

225, நாயக்கர் புதுத் தெரு, :: மதுரை.

# வக்கீல்

## பொருள் அடக்கம்

மலர் 6 — ஜூலை 1954 — இதழ் 7

நேரு—சூ என்லாய் 3

கோர்ட்டுக் கட்டண—
வியாஜ்ய மதிப்பீடு மசோதா 4

புதிய சட்டங்கள் 4

முஸ்லீம் வக்புச் சட்டம் (1955) 6

சர்க்கார் அறிக்கைகள் 8

இந்து வார்சுரிமைச் சட்ட மசோதா 9

தொழிற்சாலைச் சட்டம் 12

வழக்கும் - தீர்ப்பும்

தகப்பன் மைனர் மகன் இருவருக்கும் பொதுவான சொத்தை மைனர் மகனுக்கு மட்டில் சொத்தம் போலப் பாவித்துத் தகப்பன் கார்டியன் முறைமையில் அதைக் குத்தகைக்கு விட்டார். தகப்பன் தம் பாகத்தை இழந்ததாக ஏற்பட்டது. சுப்ரீம் கோர்ட்டுத் தீர்ப்பு. 15

பரீட்சையில் போதுமான 'மார்க்' வாங்கியும் 'பாஸ்' ஆகாத மாணவர் ஹைகோர்ட்டில் 'ரிட்' மனுக் கொடுத்த, தேறியவர்கள் ஜாப்தாவில் தாமும் சேர்ந்து கொண்டார் 17

சர்க்கார் வசமுள்ள தஸ்தாவேஜுகளைக் கோர்ட்டில் தாகல் செய்யும்படி ஒரு வழக்கில் சம்மன் செய்யப்பட்டால், முடியாதென்று சொல்ல எந்த அதிகாரிக்கு உரிமை உண்டு? கலெக்டருக்கா, காரியதரிசிக்கா, அல்லது மந்திரிக்கா? 18

கேள்வியும் – பதிலும் 19

கூட்டுறவுச் சட்டமும் விதிகளும் 22

# வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 6 ஜூலை 1954 இதழ் 7


## நேரு—சூஎன்லாய்

இந்த இரண்டு பெயர்களையும் கண்டு இன்று அமெரிக்காவானது பயப்படுகின்றது. ஏன்? இவ்விருவர்களும், தூங்கி எழுந்த ஆசியாவின் பிரதிநிதிகளாவார்கள். இப் பூவுலகத்தின் மொத்த ஜனத் தொகையில் சரிபாதி மக்கள் இவ்விருவர்களையும் பின்பற்றுபவர்கள். துயில் கொண்டிருந்த ஆசியாவைச் சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக ஐரோப்பிய நாடுகள் சுரண்டிச் சூறையாடித்தன. இன்று ஆசியா விழித்துக் கொண்டு விட்டது. இதை அறிந்த பிரிட்டிஷார் ஆசியாவை அனேகமாக விட்டு விட்டனர். பிரஞ்சுக்காரர்களும் விட்டுவிடத் தயாராக இருக்கின்றனர். இந்தோசைனாவில் இப்போது அந்நாட்டு மக்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் சண்டை நடந்து கொண்டிருந்தாலும், பிரஞ்சு மக்கள் அதை விரும்பவில்லை. பிரஞ்சு சர்க்காரும் இந்தோசைனாவை விட்டுவிடத் தீர்மானித்துவிட்டனர். ஆனால் விட முடியவில்லை. ஏனென்றால், அமெரிக்கர்கள் அதை விரும்பவில்லை. பிரஞ்சுக்காரர்களை வைத்துக் கொண்டு தான், அவர்களுக்கு உதவி செய்யும் பாவனையில், அமெரிக்காவானது ஆசியாவை ஆக்கிரமிக்கத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. தான் அப்படிச் செய்யாவிட்டால் ஆசியா முழுமையும் 'கம்யூனிஸ்டு' நாடுகளாகி விடுமென்று அமெரிக்காவானது பூச்சாண்டி காண்பிக்கின்றது.

ஆசிய நாடுகள் கம்யூனிஸ்டுக் கொள்கைகளைப் பின்பற்றினாலும், பின்பற்றா விட்டாலும், அவர்கள் எவரும் அமெரிக்காவை விரும்ப மாட்டார்கள். யந்திரங்களை ஒட்டவே மனிதர்கள் இருக்கிறார்கள் என்ற அமெரிக்கக் கொள்கைக்கும் மனிதனுடைய உதவிக்குத்தான் யந்திர சாதனங்கள் வேண்டுமென்ற ஆசிய மக்களின் மனப்பான்மைக்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன. இவ்வுலக நாடுகள் எல்லாம், ஒன்று அமெரிக்காவைத்தான் பின்பற்ற வேண்டும் அல்லது கம்யூனிஸ்டு நாடாகத்தான் இருக்க வேண்டும்; வேறு நடு வழி ஒன்றுமில்லை என்று ஏற்பட்டால், ஆசிய நாடுகள் எதுவும், பசியால் தான் கூட, அமெரிக்காவுடன் ஒரு நாளும் சேரா தென்பது திண்ணம். தர்மம் நிறைந்த ஆசியாவில், துறவிகள் மலிந்த ஆசியாவில், பொது உடைமைத் தத்துவத்தைக் கண்டு ஒருவரும் அமெரிக்கர்களைப் போல் நடுங்கவில்லை. 'கம்யூனிஸம்' வருவதை விரும்பாத ஆசிய மக்கள் கூட அதை அதிகமாக எதிர்க்கவில்லை. சீனா ஒரு கம்யூனிஸ்டு தேசம்தான். இந்தியா கம்யூனிஸ்டு நாடல்ல. இருந்தாலும் இவ்விரு தேசங்களும் ஒன்றோடொன்று சண்டை போடாமலும் ஒருவர் விவகாரங்களில் மற்றவர் தலையிடாமலும், ஒருவரை ஒருவர் மதித்தும் இருப்பது சாத்தியமாகு மென்று இருவரும் கூடிக் காண்பித்த இந்தியப் பிரதமர் நேருவையும் சீனப் பிரதமர் சூஎன்லாயையும் அமெரிக்கா புரிந்து கொள்ளாமல் தவிக்கின்றது. இதில் ஏதோ மர்மம் இருக்கிறதென்று அமெரிக்கர் நினைக்கின்றனர். அமெரிக்க ஜனாதிபதியும் பிரிட்டிஷ் பிரதம மந்திரியும் ஆசியாவைப்பற்றி கவலை கொண்டு வாஷிங்டன் நகரில் ஒன்று கூடிக் கலந்து ஆலோசனை செய்தனரோ, அன்று தினமே சீனக் குடியரசின் பிரதமரும் இந்தியக் குடியரசின் பிரதமரும் புதுடில்லியில் கூடிப்

187732

பேசினர். ஆனால் அன்று உலகத்தின் கண்கள் காதுகள் எல்லாம் புதுடில்லியைத்தான் நோக்கின! உலகவல்லரசுகள் எல்லாம் ஆசியாவின் புதிய சக்தியானது எவ்வகை உருவமெடுக்கும் என்பதைத்தான் அன்று ஆலோசிக்கலாயினர்!

## கோர்ட்டுக் கட்டண— வியாஜ்ய மதிப்பீடு மசோதா

கோர்ட்டுக்களில் வழக்கு முதலிய நடவடிக்கைகளுக்காகக் கட்டவேண்டிய கட்டணங்களைப் பற்றிய சட்டம் ஏற்பட்டது 1870 ல். அதாவது, 80 வருடங்களுக்குமுன் ஏற்பட்ட சட்டம்தான். அவ்வப்போது ஏற்பட்ட மாறுதல்களுடன் இப்போது அமுலில் இருந்து வருகிறது. இதை மாற்றி அமைப்பதற்காகச் சென்னை சர்க்கார் ஒரு மசோதாவைப் பிரசுரம் செய்திருக்கின்றனர். எந்த நாட்டிலும் நீதிபரிபாலனம் என்பது அதற்காகவென்று தனிக் கட்டணம் ஒன்றுமில்லாமலே நடத்தப்பட்டால் நல்லதுதான். ஆனால் அது சாத்தியமில்லை. நீதிபதிகளுடைய சம்பளம், சிப்பந்திகளுடைய சம்பளம், கட்டடங்கள், தளவாட சாமான்கள் இவை எல்லாவற்றிற்கும் ஏராளப் பணம் வேண்டும். அவ்விதம் செலவாகும் பணத்துக்குப் போதுமான கட்டணங்களை மட்டில் குத்து மதிப்பாக வசூல் செய்வதில் ஒரு நியாயம் இருக்கின்றது. பல நாகரிக நாடுகளும் அப்படித்தான் செய்து வருகின்றன. அதைக் குறிக்கோளாக வைத்துக் கொண்டு வழக்குகளுக்கும் மற்ற நடவடிக்கைகளுக்கும் கட்டணங்களை நிர்ணயம் செய்து விதிகள் இயற்றுவதுதான் போற்றத்தக்கது. அப்படியில்லாமல், நீதி இலாகாவின் செலவு எவ்வளவோ அதற்கு மிக மிக அதிகமான வருமானம் கிடைக்கும்படி கட்டணங்களை உயர்த்தி, இதனால் ஒரு மிச்சம் அல்லது லாபத்தை எதிர்பார்ப்பது நீதியை விற்பனை செய்வது போலாகும். சென்னைச் சர்க்கார் இம்மசோதாவின் விவரங்களையும் கட்டண விகிதங்களையும் நிர்ணயம் செய்வதற்கு முன்பு, இவ் விஷயத்தில் தங்களுடைய லட்சியங்கள் என்ன, நீதி பரிபாலனச் செலவுகளுக்காக மட்டில் பணம் கிடைத்தால் போதுமா? அல்லது வியாபாரமனப்பான்மையில் இக் கட்டணங்களிலிருந்து செலவுபோக, சர்க்காரின் மற்ற செலவுகளுக்காக ஏராள மிச்சத்தை எதிர்பார்க்கின்றனரா—என்பதை தெளிவுபடுத்த வேண்டியது மிக அவசியமாகும். இவ் விஷயத்தில் சர்க்காரின் கொள்கை என்ன என்று தெரிந்தால், அதற்குத் தக்கபடி கட்டண விகிதங்களையும் வியாஜ்யங்களை மதிப்பிடும் முறைகளையும் நிபுணர்களைக் கொண்டு வகுத்துக் சொல்லுவது மிகச் சுலபமாகும்.

# புதிய சட்டங்கள்

### சுருக்கியும்-வரிசையாகவும்

## 1954-ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டவை. முதலில் இருக்கும் எண், அவ்வருடத்திய எத்தனையாவது சட்டம் என்பதைக் குறிக்கும். பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அச்சட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன. வரிசையில் விட்டுப்போன சட்டங்களும், பிரசுரமானவுடன் "வக்கீல்" பிந்திய இதழ்களில் விளக்கப்படும்.]

### 26 குறைந்த பட்ச சம்பளச் சட்டத் திருத்தம்.

Minimum wages Amendment Act 1954 (20-5-1954) பலவகைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் எவ்வளவு கொடுக்கப்படவேண்டுமென்று ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் மத்திய சர்க்காரோ, ராஜ்ய சர்க்காரோ, நிர்ணயம் செய்துவிடவேண்டுமென்று இருந்த செக்ஷன் 3 (1) திருத்தப்பட்டிருக்கிறது. அதாவது இச் சட்டத்தில் முதல் பாகத்தில் கண்டிருக்கும் தொழில்களுக்கும் சரி, இரண்டாவது பாகத்தில் கண்டிருக்கும் தொழில்களுக்கும் சரி, குறைந்தபட்ச சம்பள விகிதங்களை 31-12-1954 க்குள் நிர்ணயம் செய்யப்பட்டு விடவேண்டுமென்று அந்த ஷரத்து திருத்தப்பட்டிருக்கிறது. செக்ஷன் 3 (1A) என்று புதிய ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது, எந்த ராஜ்யத்திலாவது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் எந்தத் தொழிலிலும் மொத்தம் ஆயிரம் தொழிலாளர்களுக்குக் குறைவாகவே இருந்தால் அத்தொழில் சம்பந்தப்பட்ட வரையில் குறைந்தபட்ச சம்பள விகிதம் நிர்ணயிக்கப்பட வேண்டியதில்லை. ஆனால் இது சம்பந்தமாக விசாரணை செய்து அத்தொழிலிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் சேர்ந்துவிட்டதாகச் சர்க்காரால் நிர்மானிக்கப்பட்டால், அதுமுதல் ஒரு வருடத்திற்குள் அத்தொழிலுக்கும் குறைந்தபட்ச சம்பள விகிதம் நிர்ணயம் செய்யப்படவேண்டும். செக்ஷன் 26 (2A) என்று ஒரு புதிய ஷரத்து

சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது, எந்தத் தொழிலிலாவது எந்த இடத்திலாவது இச்சட்டப்படி சர்க்கார் நிர்ணயம் செய்யக்கூடிய குறைந்தபட்ச சம்பளத்திற்கும் அதிகமாகவே தொழிலாளர்களுக்குச் சம்பள வசதிகள் கொடுக்கப்படுவதாகச் சர்க்காருக்குத் தோன்றினால், அத்தொழிலாளர்களுக்கு இச்சட்ட ஷரத்துக்கள் பூராவுமோ சில மட்டுமோ பொருந்தாதென விதி விலக்கு அளிக்கவும் சர்க்காருக்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. செக்ஷன் 31 என்று ஒரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இத்திருத்தச் சட்டத்திற்கு முன்பு இருந்த சட்டத்தில் கண்ட கெடுவுக்குப் பிறகு சர்க்காரால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச சம்பள விகிதங்களும் செல்லுபடியானவை என்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

### 27. பொது நூல் நிலையங்களுக்குப் புத்தகப் பிரதிகள் அனுப்பவேண்டியது பற்றிய சட்டம்.

Delivery of Books (Public Libraries) Act 1954. (20-5-1954) புத்தகங்கள் பிரசுரம் செய்பவர்கள் கவனிக்க வேண்டிய சட்டம். இச்சட்டம் காஷ்மீர் தவிர அல்ல இந்தியாவிலும் அமுலில் இருக்கும். இச்சட்டத்திற்குப் பிறகு பிரசுரமாகும் புத்தகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு பிரதியை, பிரசுரிப்பவர் (பப்ளிஷர்) கல்கத்தாவிலிருக்கும் தேசிய நூல் நிலையத்துக்கு (National Library at Calcutta) 30 நாட்களுக்குள் அனுப்பவேண்டும். தவிர, மத்திய சர்க்காரால் கெஜட் அறிக்கை மூலம் குறிப்பிடப்படும் வேறு மூன்று பொது நூல் நிலையங்களுக்கும் ஒவ்வொரு பிரதி அனுப்பவேண்டும். இவ்விதம் அனுப்பாமலிருப்பது குற்றமாகும். புத்தகத்தின் விலையும் ரூ. 50க்கும் மேற்படாத அபராதம் விதிக்கப்படலாம். அச்சகச் சட்டத்தின் (Press and Registration of Books Act 1867) செக்ஷன் 9-ன்படி அனுப்பப்பட வேண்டிய புத்தகப் பிரதிகளைத் தவிர இச்சட்டப்படிக்கும் பிரதிகள் அனுப்பப்படவேண்டும்.

### 28. உயர்நீதிபதிகள்—உத்தியோக நிபந்தனைச் சட்டம்.

High Court Judges - Conditions of Service Act 1954. (20-5-1954) ஹைகோர்ட் உயர்நீதிபதிகளின் சம்பளம், விடுமுறை, பென்ஷன் முதலிய உத்தியோக விஷயங்களைப்பற்றிய விதிகள் அடங்கிய சட்டம்.

### 29. முஸ்லீம் வகுப்புச் சட்டம்.

The wakf Act 1954. (21-5-1954) முஸ்லீம்களுடைய மத தர்ம ஸ்தாபனங்களைப் பற்றிய இம்முக்கியச் சட்ட ஷரத்துக்கள் விவரமாக விளக்கப்பட்டிருக்கின்றன.


ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம
PRC A. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை

ஸ்தாபிதம் 1941
ரிஜிஸ்டர் நெ. 152070
REGD No. 152070
ஆறுமுக விலாஸ் சீயக்காய் பவுடர்.
Prop: A.C.KANI. MADHURAI
ஆறுமுகவிலாஸ் சீயக்காய் பவுடர் கம்பெனி
Pro: A. சின்னக்கனி நாடார் டோர் நிர். 7.
கெம்பர் 1 போலீஸ் ஸ்டேஷன் சந்து,
மதுரை.

மூர்த்தி ஸ்டோர்
செம்பனார்கோவில்
(மாயூரம் தாலுக்கா)
எங்களிடம் புது சைகிள்களும், சைகிள் சாமான்கள், பெட்ரோமாக்ஸ் லைட் சாமான்கள், தையல் மிஷின் சாமான்கள் & இரும்பு போன் சாமான்களும் விலை சகாயமாய் கிடைக்கும்.
சைகிள்களின் எல்லாவிதமான ரிப்பேர்களும் செய்யப்படும்.
உரிமையாளர்,
T. N. ராமமூர்த்தி.

ஆடைகளை அழகு பெறச் செய்வது
★ அன்னகிளி ★
சோப்
— தயாரிப்பவர் —
சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 22 :: தஞ்சாவூர்.

# முஸ்லீம் வக்புச் சட்டம் (1954)

[The Muslim Wakfs Act 1954 — இது இந்திய பார்லிமெண்டால் இயற்றப்பட்ட 1954-ஆம் வருடத்திய 29 ஆவது மத்தியச் சட்டம். 21-5-1954 தேதியில் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 16-6-1954 சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.]

## இச்சட்டம் அமுலில் உள்ள இடங்களும், அமுலுக்கு வரும் தேதியும்.

இச்சட்டம் காஷ்மீர் தவிர அகில இந்தியாவிலும் அமுலில் இருக்கும். ஆனால் ஒவ்வொரு ராஜ்யத்திலும் இச்சட்டம் எந்தத் தேதி முதல் அமுலுக்கு வருமென்று குறிப்பிட மத்திய சர்க்காருக்குத்தான் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு ராஜ்யத்திலும் தனித்தனித் தேதிகளில் இச்சட்டம் அமுலில் வரும்படி மத்திய சர்க்கார் தேதி குறிப்பிடலாம். இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பே ஏற்பட்டிருக்கும் வக்புக்களுக்கும் சரி, பிறகு ஏற்படும் வக்புக்களுக்கும் சரி இச்சட்டம் உண்டு.

## "வக்பு" என்றால் என்ன?

இஸ்லாமியச் சட்டத்தால் புனிதமானதென்றோ, மதசம்பந்தமானதென்றோ, தரும சம்பந்தமானதென்றோ கருதப்படும் காரியங்களுக்காக ஸ்தாவர சொத்துக்களையோ அல்லது ஜங்கம சொத்துக்களையோ ஒரு முஸ்லீம் நிரந்தரமாக அர்ப்பணம் செய்வதற்கு "வக்பு" (Wakf) என்று பெயர். நீண்டகாலமாக வக்பு எனக் கருதப்பட்டுவரும் இதில் சேர்ந்ததே. 'வக்பு' சொத்துக்களை நிர்வாகம் செய்பவருக்கு 'முதவல்லி' (Mutawalli) என்று பெயர்.

## வக்புகளைப் பற்றிய சர்வே அல்லது பூர்வாங்க விசாரணை

ஒவ்வொரு ராஜ்யத்திலும் இச்சட்டம் அமுலுக்கு வரும் தேதியில் எவ்வளவு வக்புக்கள் எங்கெங்கே இருக்கின்றன என்பதைப் பற்றி 'சர்வே' செய்ய அதாவது, பூர்வாங்க விசாரணை செய்ய ராஜ்ய சர்க்காரால் "வக்பு கமிஷனர்" (Commissioner of wakfs) என்ற ஒரு அதிகாரி நியமிக்கப்படுவார். உபரிக் கமிஷனர்களும் உதவிக் கமிஷனர்களும் நியமிக்கப்படுவார்கள். யுக்தமான விசாரணை செய்த பிறகு கமிஷனரானவர் மேலே கண்ட விஷயங்களைப் பொறுத்து ராஜ்ய சர்க்காருக்கு ஒரு ரிப்போர்ட் அனுப்புவார். வக்பு கமிஷனருடைய ரிப்போர்ட்டில் இருக்கவேண்டிய விஷயங்களாவன:— (1) அந்த ராஜ்யத்தில் இருக்கும் மொத்த வக்புகளின் எண்ணிக்கை. இதில் ஷியா வக்பு எத்தனை; ஸுன்னி வக்பு எத்தனை. (2) ஒவ்வொரு வக்பின் சொத்துக்கள் (3) ஒவ்வொரு வக்பின் மொத்த வருமானம் (4) வக்பு கொடுக்க வேண்டிய வரி செஸ் முதலியவை (5) வக்பின் வருமானத்தை அடைவதற்கான செலவுகள், முதவல்லியின் வருமானங்கள் (6) மற்றும் விதிகளில் கண்ட விபரங்கள். இவ்விவரங்கள் கமிஷனருடைய ரிப்போர்ட்டில் இருக்கவேண்டும். விசாரணை செய்யும்போது கமிஷனருக்கு சிவில் கோர்ட்டுக்குள்ள சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, சாக்ஷிகளைச் சம்மன் செய்யவும் தஸ்தாவேஜுகளை ஆஜர் செய்ய உத்தரவிடவும் கமிஷன் நியமிக்கவும், சோதனைகள் செய்யவும் கமிஷனருக்கு அதிகாரமுண்டு. கமிஷனருடைய ரிப்போர்ட்டை வக்பு போர்டுக்கு அனுப்பி அவர்கள் அங்கீகரித்த பிறகு வக்புகளின் ஜாப்தா ஒன்று விவரங்களுடன் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். இவ்விவரம் பிரசுரமான தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் அது சம்பந்தமான தகராறுகளைப்பற்றிச் சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம். அதாவது, ஒரு சொத்து வக்பு சொத்தா அல்லவா என்றாவது, அல்லது அது ஷியா வக்பா அல்லது ஸுன்னி வக்பா என்றாவது தகராறுகள் இருந்தால், வக்பு போர்டோ, முதவல்லியோ, வேறு அக்கறையுள்ள நபரோ மேலே கண்டபடி தாவா செய்யலாம். ஜாப்தாவில் கண்ட விவரங்களைத் திருத்தும்படி அவ்வழக்கில் தீர்ப்புச் செய்ய சிவில் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. இவ்வித 'சர்வே' சம்பந்தமான மொத்தச் செலவுகளை எல்லா முதவல்லிகளும் அவரவரிடம் இருக்கும் வக்பு சொத்துக்களின் வருமானத்தைப் பொறுத்து வீதாசாரப்படி ராஜ்ய சர்க்காருக்குக் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு முதவல்லியும் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று கமிஷனரே நிர்ணயம் செய்வார்.

## வக்பு போர்டு

இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு ராஜ்ய சர்க்காரால் "வக்பு போர்டு" (Board of Wakfs) ஒன்று நியமிக்கப்படும். சென்னை ராஜ்ய வக்பு போர்டில் 11 அங்கத்தினர்கள் (மெம்பர்கள்) இருப்பார்கள். போர்டாரே தங்கள் அக்கிராசனரைத் (Chairman) தேர்ந்து கொள்ளுவார்கள். போர்டு மெம்பர்கள் யாவரும் முஸ்லீம்களாகவும், 21 வயது பூர்த்தியானவர்களாகவும் இருப்பார்கள். பார்லிமெண்ட்

அல்லது ராஜ்ய சட்டசபை அங்கத்தினர்களிடமிருந்தோ முஸ்லீம் சட்டத்தில் விசேஷ அறிவாளிகளாகவும் ராஜ்ய ஜமாயத்—உல்—உலாமை ஹிந்த் அல்லது ராஜ்ய ஷியா கான்பரன்ஸ் போன்ற சங்கங்களின் பிரதிநிதிகளானவர்களிலிருந்தோ நிர்வாகம், சட்டம், பண வரவு செலவு இவ்விஷயங்களில் விசேஷப் படிப்பு உள்ளவர்களிலிருந்தோ முதவல்லிகளிலிருந்தோ இப்போர்டு அங்கத்தினர்களை ராஜ்ய சர்க்கார் பொறுக்கி நியமிப்பார்கள். ராஜ்யத்திலுள்ள ஷியா, ஸுன்னி வக்புகளின் மொத்த எண்ணிக்கை பொறு ஆனம் இவைகளுக்குத் தக்கபடி போர்டில் ஷியா அங்கத்தினர்களும் ஸுன்னி அங்கத்தினர்களும் நியமிக்கப்படுவார்கள். போர்டு மெம்பர்கள் 5 வருடம் பதவியிலிருப்பார்கள்.

## வக்பு போர்டின் அதிகாரங்கள்

ராஜ்யத்திலுள்ள வக்புக்கள் எல்லாவற்றையும் மேற்பார்வை பார்த்துக் கொள்ளுவதும், வக்புக்கள் சரியாக நிர்வாகம் செய்யப்படுகின்றனவா வருமானங்கள் வக்பின் நோக்கங்களுக்காகச் செலவு செய்யப்படுகின்றனவா என்று கவனிக்க வேண்டி பொறுப்பு வக்பு போர்டைச் சார்ந்ததாகும். வக்பின் நிர்வாகத்தைப்பற்றி உத்தரவுகள் செய்யவும், வக்புக்கு 'ஸ்கீம்' அல்லது ஏற்பாடு வகுக்கவும் இப்போர்டாருக்கு அதிகாரமுண்டு. ஒரு வக்பின் நோக்கங்கள் என்ன என்று காண்பிக்கக்கூடிய யாதொரு தஸ்தாவேஜுகளும் இல்லாவிட்டாலும், வக்ப ஏற்பட்ட காரியங்கள் நின்று விட்டாலும், வக்பின் வருமானத்தை எப்படிச் செலவு செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப் போர்டாருக்கு அதிகாரம் உண்டு. ஆனால் இவ்விஷயத்தில் ஸுன்னி வக்புகளைப் பற்றி ஸுன்னி மெம்பர்களும், ஷியா வக்புகளைப் பற்றி ஷியா மெம்பர்களும் மட்டில்தான் தீர்மானம் செய்யவேண்டும். முதவல்லிகள் அனுப்பும் வரவு செலவுத் திட்டங்களைப் பரிசீலனை செய்து அங்கீகரிப்பது; வக்பு கணக்குகளைத் தணிக்கை செய்ய ஏற்பாடு செய்வதும்; முதவல்லிகளை நியமிப்பதும் நீக்குவதும்; இழந்துபோன வக்புச் சொத்துக்களை மீட்பதும்; வக்பு சம்பந்தமான நடவடிக்கைகள் நடத்துவதும்; வக்பு சொத்துக்களை 3 வருடங்களுக்கு மேல் குத்தகை விடுவதையும், அடமானம் பரிவர்த்தனை செய்வதை அங்கீகரிப்பதும்; வக்பு நிதியைப் பரிபாலனம் செய்வதும்; அவ்வப்பொழுது முதவல்லிகளிடமிருந்து கணக்கு வழக்குக் கேட்பதும்; வக்பு சொத்துக்களையும் கணக்குகளையும் சோதனை செய்வதும்; வக்பு சொத்துக்களின் தன்மை விஸ்தீர்ணம் இவைகளை நிர்ணயம் செய்வதும் வக்பு போர்டாரின் உரிமையும் கடமையுமாகும். போர்டாரால் ஸ்கீம் ஏற்படுத்தப்பட்டால் அதை மாற்றச் சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம். போர்டு குறிப்பிட்ட அந்தந்தப் பிரதேசங்களுக்கு கமிட்டிகள் நியமிக்கப் போர்டுக்கு அதிகாரமுண்டு. போர்டுக்கு ஒரு முஸ்லீம் காரியதரிசி நியமிக்கப்படுவார்.

## "வக்பு"க் களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்

இச்சட்டத்திற்கு முன்பு ஏற்பட்டிருக்கும் வக்புக்களையும் சரி, பிறகு ஏற்படும் வக்புகளையும் சரி, அதன் முதவல்லிகள் வக்பு போர்டுக்கு மனுப் போட்டு வக்பைப் போர்டாரிடம் பதிவு (ரிஜிஸ்டர்) செய்து கொள்ளவேண்டும். வக்பு ஏற்படுத்தியவரும் அவருடைய சந்ததிகளும், வக்பினால் பயன் அடைபவர்களும், வக்பு எந்த வகுப்பைச் சேர்ந்ததோ அந்த வகுப்பைச் சேர்ந்த எந்த முஸ்லீமும், வக்பைப் பதிவு செய்து கொள்ள வக்பு போர்டாரிடம் மனுப் போடலாம். பதிவு செய்யப் போடும் மனுவில் வக்பு சம்பந்தப்பட்ட பூரா விவரங்களும் இருக்க வேண்டும். மனு உறுதிமொழிக் கையெழுத்துடன் இருக்க வேண்டும். இச்சட்டத்திற்கு முன்பே ஏற்பட்டிருக்கும் வக்புக்களைப் பதிவு செய்து கொள்ள மனுவானது இச்சட்டம் அமுலுக்கு வந்த 3 மாதங்களுக்குள்ளும்; இச்சட்டம் வந்த பிறகு ஏற்படும் வக்புக்களைப் பதிவு செய்து கொள்ள மனுவானது வக்பு ஏற்பட்ட தேதியிலிருந்து 3 மாதங்களுக்குள்ளும் போட வேண்டும். முதவல்லிகள் பதிவு மனுப் போடாமலிருப்பது ஒரு குற்றமாகும். ரூ. 1000 வரை அபராத தண்டனை விதிக்கப்படலாம்.

## வக்பு ரிஜிஸ்தர்

வக்புகளைப் பற்றிய விவரங்கள் அடங்கிய ஒரு ரிஜிஸ்டர் போர்டாரால் வைத்துக் கொள்ளப் படும்.

## வக்புச் சொத்தைப்பற்றிய தீர்ப்பு

ஒரு சொத்தானது வக்புச் சொத்தா அல்லவா என்றும், அது ஷியா வக்பா அல்லது ஸுன்னி வக்பா என்பது பற்றியும் தேவையானால் விசாரணை செய்து தீர்மானம் செய்ய வக்பு போர்டுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் இதைச் சிவில் கோர்ட்டில் தாவா செய்து மாற்றிக் கொள்ளலாம்.




# சர்க்கார் அறிக்கைகள்

## மோட்டார் விதித் திருத்தம்

சென்னை மோட்டார் வாகனச் சட்ட விதி 129 உடன் ஒரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது, போலீஸ் ஜில்லா சூபரின்டென்டின் உத்தரவின் பேரில் 'ரோடு டிராபிக் போர்டு'க்கு அப்பீல் செய்யப்பட்டு அந்தப் போர்டில் அக்கிராசனரும், போலீஸ் ஜில்லா சூபரின்டென்டையும் தவிர வேறு அங்கத்தினர்கள் இல்லாவிட்டால், அப்பீலை அக்கிராசனர் மட்டில் தனிமையில் கேட்டு முடிவு செய்யவேண்டுமென்று ஒரு ஷரத்து சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

(G. O. 1735 — 30-6-1954-சென்னைச் சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட் — பாகம் I—244.)

## சென்னைக் கட்டட ஜாகை-வாடகைக் கட்டுப்பாடு விதிகள் திருத்தம். எக்ஸ்பார்டி உத்தரவை மாற்ற மனுப்போட 30 நாள் கெடு

சென்னை-கட்டடங்கள் ஜாகை-வாடகைக் கட்டுப்பாடு விதிகளில் (Madras Buildings-Lease and Rent Control-Rules 1951) கீழ் கண்ட திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவையாவன:—விதி 9 (3)ல் ரெண்ட் கண்ட்ரோலர் கட்டடத்தின் சொந்தக்காரர் மீதோ, வாடகைக்காரர்மீதோ 'எக்ஸ்பார்டி'யாகச் செய்யும் உத்தரவை மாற்ற அவ்வுத்தரவு கிடைத்த 15 நாட்களுக்குள் மனுப்போடலாமென்று இருந்தது. இப்போது அதை மாற்றி 30 நாட்களுக்குள் அவ்வித மனுப்போடலாமென்று திருத்தப்பட்டிருக்கிறது. அதேபோல விதி 12 (3)ல் ரெண்ட் கண்ட்ரோலருடைய உத்தரவின்மீது அப்பீல் செய்யப்பட்டு அப்பீல் கோர்ட்டில் எக்ஸ்பார்டியாகத் தீர்ப்பு ஏற்பட்டிருந்தாலும் அதை மாற்ற 15 நாட்களுக்குள் மனுப்போடவேண்டுமென்று இருந்தது மாற்றப்பட்டிருக்கிறது. அப்பீல் கோர்ட்டிலும் 'எக்ஸ்பார்ட்டி' தீர்ப்பை மாற்ற 30 நாட்களுக்குள் மனுப்போடலாம். 30 நாள் என்பது ரெண்ட் கண்ட்ரோலரோ, அப்பீல் அதிகாரியோ தம்முடைய தீர்ப்பைப் பகிரங்கக் கோர்ட்டில் வாசித்த தேதியிலிருந்து 30 நாட்கள் கணக்குச் செய்யப்படும். அப்பீல் அதிகாரி பகிரங்கக் கோர்ட்டில் தீர்ப்பளிக்காவிட்டால், அந்த அப்பீல் உத்தரவு என்று தினம் சம்பந்தப்பட்ட நபரிடம் 'சர்வு' செய்யப்பட்டதோ, அத்தேதியிலிருந்து கணக்குச் செய்யப்படவேண்டும். உத்தரவு அல்லது தீர்ப்பின் நகல் வாங்கத் தேவையான காலத்தை நீக்கி மேற்கண்ட 30 நாள் கணக்குச் செய்யப்படவேண்டும். மேலும், ரெண்ட்கண்ட்ரோலரிடமோ, அப்பீல் கோர்ட்டிலோ எக்ஸ்பார்டித் தீர்ப்பை மாற்ற மனுக் கொடுத்து விட்ட பிறகு, அம்மனு முடிவடையும் வரையில் அத்தீர்ப்பு நிறைவேற்றுதல் நிறுத்தி வைக்கப்படவேண்டும்.

(30-6-1954-சென்னைச் சர்க்கார் கெஜட்-ரூல் சப்ளிமெண்ட்—பாகம் II—79.)

## ஏற்றுமதிக் கட்டுப்பாடு உத்தரவு (1954)

ஏற்றுமதி சம்பந்தமான முந்திய உத்தரவுகளை எல்லாம் ரத்துச்செய்து விட்டு மத்திய சர்க்கார் புதுக் கட்டுப்பாடு உத்தரவு ஒன்று 10-5-1954ல் பிறப்பித்திருக்கின்றனர். இது 2-6-1954 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் 51ஆம் பக்கத்தில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. எந்த எந்தச் சரக்குகளை எந்த எந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய யாதொரு லைசென்சும் தேவையில்லை என்ற ஜாப்தாக்களும்; எந்த எந்தச் சரக்குகளுக்கு ஏற்றுமதி லைசென்சு வேண்டுமென்ற ஜாப்தாவும், லைசென்சு எந்த எந்த அதிகாரிகளிடம் எவ்வளவு கட்டணம் கட்டி வாங்கிக் கொள்ள வேண்டுமென்றும் இக்கட்டுப்பாடு உத்தரவில் விவரமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# இந்து வார்சுரிமைச் சட்ட மசோதா.

இப்போது 'இந்துச் சட்டம்' என்று வழங்கி வரும் சட்ட விதிகள் எல்லாம் எந்தச் சட்ட சபைகளாலும் இயற்றப்பட்டவை அல்ல. இரண்டொரு விஷயங்களைப்பற்றிச் சட்ட சபைகள் சட்ட மியற்றி இருந்தாலும், பெரும்பாலும் இந்துச் சட்ட மென்பது புராதனமான பழக்க வழக்கங்களாலும், உயர் நீதிபதிகள் அந்தந்த வழக்குகளில் அளித்து வரும் அபிப்பிராயங்களாலும் திரண்டு வந்திருக்கும் விதிகளேயாகும். இந்தியா சுதந்தரமடைந்த பிறகு இந்துச் சட்ட விதிகள் எல்லாவற்றையும் தொகுத்து ஒரே சட்டத்தில் இருக்கும்படி செய்ய, இந்துச் சட்டத் தொகுப்பு மசோதா என்று தயார் செய்யப்பட்டது. ஆனால் இதற்கு பலத்த ஆட்சேபனைகள் இருந்தமையால் அவ்விதம் செய்வதை இந்திய சர்க்கார் கைவிட்டு விட்டனர். ஆனால் விஷயத்தை அவர்கள் கைவிட்டு விடவில்லை. அதே இந்துச் சட்டத் தொகுப்பு மசோதாவையே அக்ககாகப் பிரித்து, தனித்தனி மசோதாவாக இயற்றி வருகின்றனர். இந்து விவாகச் சட்ட மசோதாவானது நமது இந்திய பார்லிமெண்டின் மேல் சபையாகிய ராஜ்ய சபையில் பாசாகி விட்டது. மக்கள் சபையும் அதை, 'பாஸ்' செய்த பிறகு ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்று அது சட்டமாகிவிடும். இது இந்துச் சட்டத்தில் முதல் பகுதியாகும். இரண்டாவதாக, இந்து மைனர்—கார்டியன மசோதா என்றொரு மசோதாவும் இந்தியப்பார்லிமெண்டில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்போது இந்துச் சட்டத்தில் மிகமுக்கியமான ஒரு பகுதியாகிய 'வார்சுரிமை' பற்றிய மசோதா பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இம் மசோதாவைப் பற்றிப் பொது மக்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ளும் பொருட்டே இம்மசோதா சர்க்கார்கெஜட்டுவில் பிரசரம் செய்யப்பட்டிருக்கின்றது. இம்மசோதாவைப் பற்றிய அபிப்பிராயங்களைச் சென்னைச்சர்க்கார் சட்ட இலாகா காரியதரிசிக்கு 7-7-1954 க்குள் தெரிவிக்க வேண்டும் என்று கெஜட்டில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

## இந்து வார்சுரிமைச் சட்ட மசோதாவின் முக்கிய அம்சங்கள்.

இச் சட்டமானது பிரிபடாத இந்துக் குடும்ப சொத்துக்களுக்குப் பொருந்தாது. அதாவது, 'அவிபக்த' இந்துக் குடும்ப சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வரையில் இச் சட்டம் கிடையாது. தவிர, தம்முடைய சொத்துக்களைப்பற்றி உயில் ஒன்றும் எழுதி வைக்காமல் இறந்து போகும் இந்துவின் சொத்துக்களைத்தான் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வார்சுகள் இச்சட்டத்தில் கண்ட முறைப்படி அடைவார்கள். மேலும், விசேஷ விவாகச் சட்டப்படிப் பதிவுத் திருமணம் செய்து கொள்ளும் இந்து ஒருவர் இறந்து போனால், அவருடைய சொத்துக்களுக்கும் இச் சட்டம் கிடையாது. ஏனென்றால், அவருடைய சொத்துக்களைப் பொறுத்த வரையில் இந்திய வார்சுரிமைச் சட்டம் (Indian succession Act 1925) என்ற சட்ட ஷரத்துக்களின் படித்தான் வார்சு பாத்தியம் நிர்ணயிக்கப்படு மென்று விசேஷ விவாகச் சட்டத்திலேயே ஒரு ஷரத்து இருக்கிறது.

## உயில் எழுதாமல் இறந்து போகும் ஆண் இந்துவின் வார்சுகள்.

இச்சட்டப்படி இறந்த ஆண் இந்துவின் வார்சுகள் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களாவார்:— (1) சிலாக்கிய வார்சுகள் (Preferential Heirs) (2) 'கோத்திரஜர்கள்' அதாவது, தாயாதி அல்லது பங்காளிகள் (3) பந்துக்கள். முதல் வகுப்பைச் சேர்ந்த வார்சுகள் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றனர். முதல் பாகத்தில் கண்ட வார்சுகள் யாவரும் சேர்ந்தாற் போல இறந்த இந்துவின் சொத்துக்களுக்கு வார்சு ஆவார்கள். அதாவது:— இறந்த இந்துவின மகன்; விதவை; மகள்; முன்னமே இறந்து போன மகனின் மகன் அல்லது மகள்; முன்னமே இறந்து போன மகளின் மகன் அல்லது மகள்; முன்னமே இறந்து போன ஒரு மகனின் விதவை; முன்னமே இறந்து போன மகனின் முன்னமே இறந்து போன மகனின் மகன்; முன்னமே இறந்து போன மகனின் முன்னமே இறந்து போன மகனுடைய விதவை.

இது வாசிப்பதற்குக் கொஞ்சம் குழப்பமாக இருந்தாலும் இவ்வார்சுகளை நன்றாகக் கவனிக்கவும். ஏனென்றால், உயில் எழுதி வைக்காமல் இறந்து போகும் ஒரு இந்துவின சொத்துக்களை மேலே கண்ட வார்சுகள் எல்லாம் சேர்ந்து (அதாவது, அவ்வித வார்சுகள் எவ்வளவு நபர்கள் இருந்தாலும் அவர்கள் எல்லோரும் சேர்ந்து) இறந்தவருடைய சொத்துக்களை வார்சாக அடைவார்கள்.

மேலே கண்ட வார்சகள் இறந்தவருடைய சொத்துக்களை அடியில் கண்ட விகிதாசாரப்படி அடைவார்கள். அதாவது :—இறந்தவருடைய விதவைக்கு (மனைவிக்கு) ஒரு பாகம்; (இரண்டு மூன்று மனைவி-விதவைகள் இருந்தாலும் எல்லோருக்குமாக ஒரு பாகம்தான்); ஒவ்வொரு ஆண் மகனுக்கும் ஒருபாகம்; ஒவ்வொரு பெண் மகளுக்கும் பாதி பாகம். இறந்த மகனுடைய கிளையிலுள்ள வார்சுகளுக்கெல்லாம் சேர்த்து ஒரு பாகம்; இறந்த மகளுடைய கிளையிலுள்ள வார்சுகளுக்கெல்லாம் சேர்த்து பாதி பாகம்.

உதாரணம்:—(1) இறந்த இந்துவுக்கு ஒரு மனைவியும், மூன்று ஆண் மக்களும் நான்கு பெண் மக்களும் உண்டு. சொத்தை 6 பாகங்களாகப் போடவேண்டும். மனைவி விதவைக்கு 1 பாகம்; ஆண் மகன் ஒவ்வொருவருக்கும் ஒரு பாகமாக 3 ஆண் மக்களுக்கும் 3 பாகங்கள்; பெண் மகள் ஒவ்வொருவருக்கும் பாதி பாகமாக 4 பெண்களுக்கும் 2-பாகங்கள் ஆக 6-பாகங்கள்.

உதாரணம் (2) :— இறந்த இந்துவுக்கு ஒரு மனைவி விதவையும் ஒரு பெண்ணும் இருக்கின்றனர். மனைவி-விதவைக்கு 1 பாகமும் பெண்ணுக்கு $\frac{1}{2}$ பாகமும் கிடைக்கும். அதாவது, சொத்தை மூன்று பாகமாகச் செய்து மனைவி-விதவை இரண்டு பாகங்களை அடைவாள்; பெண் ஒரு பாகத்தை அடைவாள்.

உதாரணம் (3):— இறந்த இந்துவுக்கு ஒரு ஆண் மகனும் ஒரு பெண் மகளும் இருக்கின்றனர். ஆண் மகனுக்கு 1 பாகம்; பெண் மகளுக்கு $\frac{1}{2}$ பாகம். அதாவது, 3ல் 2பாகம் ஆண் மகனுக்கும் 3 ல் 1 பாகம் பெண்மகளுக்கும் போகும்.

இறந்த மகனுடைய கிளையில் ஆண் மகன் அல்லது மகன்வயிற்றுப் பேரன்கள் இருந்தால் 1 பாகம் உண்டு. ஆனால் இறந்த மகனுடையகிளையில் அவருடைய ஒரு விதவை மட்டில் இருந்தாலும்; பெண் வார்சுகள் மட்டில் இருந்தாலும் அக்கிளைக்குப் பாதி பாகம்தான் உண்டு.

உதாரணம் (4) இறந்த இந்துவுக்கு ஒரு ஆண் மகனும் ஏற்கனவே இறந்துபோன ஒரு மகனுடைய விதவையும் இருக்கிறார்கள். ஆண் மகனுக்கு 1 பாகம்; விதவை மருமகளுக்கு $\frac{1}{2}$ பாகம்; அதாவது சொத்தில் 3ல் 2 பாகம் மகனுக்கும் 3 ல் ஒரு பாகம் விதவை மருமகளுக்கும் போகும்.

இறந்த பெண்ணின் கிளையிலுள்ள வார்சுகள் எல்லோரும் சேர்ந்து $\frac{1}{2}$ பாகத்தை அடைவார்கள்.

உதாரணம் (5):— இறந்த ஒரு இந்துவுக்கு ஒரு ஆண்மகனும்; முன்பே இறந்த ஒரு பெண்ணின் மகனும் இருக்கிறார்கள். ஆண் மகனுக்கு ஒரு பாகமும்; பேரனுக்கு (தௌஹித்ரனுக்கு) $\frac{1}{2}$ பாகமும் உண்டு. அதாவது, சொத்தில் 3 ல் 2 பங்கு மகனுக்கும் 3ல் 1 பங்கு பெண் வயிற்றுப் பேரனுக்கும் போகும்.

ஒரு கிளைக்குக் கிடைக்கும் பாகத்தையும் மேலே கண்ட விதிகளின்படி அக்கிளையிலிருக்கும் வார்சுகள் பிரித்துக்கொள்ளவேண்டும்.

## மேலே கண்ட வார்சுகள் ஒருவரும் இல்லாவிட்டால்

இறந்த இந்துவுக்கு மேலே முதல் வகுப்பில் முதல் பாகமாகக் கண்டிருக்கும் வார்சுகள் ஒருவர்கூட இல்லாவிட்டால் கீழே இரண்டாம் பாகமாகக் கண்டிருக்கும் வார்சுகள் கீழேகண்ட வரிசைக்கிரமப்படி, அதாவது, முதல் வரிசையில் சொல்லப்படும் வார்சு இல்லாவிட்டால் இரண்டாவதாகச் சொல்லப்படும் வார்சும்; முதல் இரண்டு வார்சுகளும் இல்லாவிட்டால் மூன்றாவதாகச் சொல்லப்படும் வார்சுகளும் இவ்விதமாகவே சொத்தை அடைவார்கள்.

ஒரே வரிசையில் இருக்கும் வார்சுகள் அவர்களுக்குள் சொத்தைச் சமபாகமாக அடைவார்கள்.

வரிசை

(1) தகப்பன்; தாய்

(2) மகனின் பெண்ணின் மகன்;
மகனின் மகளின் பெண்;
மகனின் பெண்ணின் பெண்;
சகோதரர், சகோதரி.

(3) பெண்ணின் மகனின் மகன்;
பெண்ணின் மகனின் மகள்;
பெண்ணின் மகளின் மகன்;
பெண்ணின் மகளின் மகள்.

(4) சகோதரர் மகன்;
சகோதரி மகன்;
சகோதரரின் மகள்;
சகோதரியின் மகள்.

(5) தகப்பனின் தகப்பன்;
தகப்பனின் தாய்;

(6) தகப்பனின் விதவை;
சகோதரரின் விதவை;

(7) தகப்பனின் சகோதரர்;
தகப்பனின் சகோதரி

(8) தாயின் தகப்பன்;
தாயின் தாய்

(9) தாயின் சகோதரர்;
தாயின் சகோதரி

## இவர்களும் ஒருவரும் இல்லா விட்டால்

மேற் கண்ட வார்சுகள் ஒருவரும் இல்லா விட்டால் இறந்தவருடைய சொத்துக்களுக்கு அவருடைய 5 தலைமுறைக்குள் இருக்கும் தாயாதிகள் (கோத்திரஜர்கள்) வார்சுகளாவார்கள். அவர்களும் ஒருவரும் இல்லாவிட்டால், இறந்த இந்துவின் பந்துக்கள், 5 தலை முறைகள் இருப்பவர்கள் தான் வார்சுகள். இவர்களுக்குள் வரிசைக் கிரமம் எப்படி என்பது பற்றி விதிகளும் இம்மசோதாவில் இருக்கின்றன.

## ஸ்திரீகள் அடையும் சொத்தில் அவர்களுக்குப் பூர்ண உரிமை ஏற்படும்.

இது வரை இந்தச் சட்டப்படி ஸ்திரீகள் தங்களுடைய கணவன் சொத்தையோ தகப்பன் சொத்தையோ மகனுடைய சொத்தையோ வார்சு முறைமையில் அடைந்தால் அவர்கள் ஆயுள் உள்ளவரைதான் அச்சொத்தக்களை அனுபவிக்கலாமென்றும், சில விசேஷ சந்தர்ப்பங்கள் இருந்தாலொழிய ஸ்திரீ வார்சுகள் தாங்கள் அடையும் சொத்துக்களை விற்கச் சுடப் பாத்தியமில்லை என்றும் இருக்கிறது. இம் மசோதாவானது சட்டமானால், இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு வார்சு முறைமையில் ஒரு ஸ்திரீ அடையும் சொத்துக்களுக்கு அவள் சர்வ சுதந்தர பாத்தியமுள்ளவளாகி விடுவாள். அதாவது ஆண் வார்சுகளைப் போலவே சொத்தைப் பராதீனம் செய்யும் பூர்ண உரிமை ஸ்திரீகளுக்கும் வந்துவிடும்.

## ஸ்திரீகளுக்கு வார்சுகள்

ஸ்திரீகள் பூர்ண உரிமைகளுடன் வைத்திருக்கும் சொத்துக்களுக்கும் அவர்களுடைய ஸ்திரீதன சொத்துக்களுக்கும் வார்சுக் கிரமம் பின் வருமாறு. உயில் மூலம் சொத்தைக் கொடுக்காமல் இறக்கும் இந்து ஸ்திரீயின் (1) சந்ததிகள். (2) கணவன் (3) தாய் தகப்பன் (4) கணவனின் வார்சுகள் (5) தாயின் வார்சுகள் (6) தகப்பனின் வார்சுகள். மேலே கண்ட வரிசையில் முதல் வரிசையிலிருப்பவர்கள் இல்லா விட்டால் இரண்டாவது வரிசையிலிருப்பவரும் அவரும் இல்லா விட்டால் அடுத்த வரிசையிலிருப்பவர்களும் இப்படியே வார்சுகளாவார்கள். ஒரே வரிசையிலுள்ள வார்சுகள் சமபாகமாகச் சொத்தை அடைவார்கள்.

## இப்போது சொத்தை அனுபவிக்கும் ஸ்திரீவார்சுகள்

இப்போது இருக்கும் இந்துச் சட்டப்படி இறந்தவருடைய சொத்துக்களை வார்சு முறைமையில், பராதீனம் செய்ய உரிமையின்றி ஆயுள்வரை அனுபவித்து வரக் கூடிய பாத்தியத்துடனிருக்கும் ஸ்திரீயானவள் இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு இறந்து விட்டால், இச்சட்டப்படிக்கே அடுத்த வார்சு யார் என்பதை நிர்ணயம் செய்யவேண்டும். அதாவது யாருடைய சொத்துக்கு வார்சு கண்டு பிடிக்க வேண்டுமோ அவர் அந்த ஸ்திரீ இறந்தவுடனே இறந்திருந்தால் அவருடைய சொத்துக்களுக்கு இச்சட்டப்படி யார் வார்சோ, சொத்துக்கள் அவ் வார்சுகளைத்தான் சேரும்.

மருமக்கள் தாயம், அலியசந்தான நம்பூத்திரி இச்சட்டத்திற்கு உட்பட்டவர்களுக்கும், சந்நியாசிகள் வானப்பிரஸ்தர்கள், நைஷ்டிகப் பிரம்மசாரிகள் இவர்களுக்கும் இச் சட்டத்தில் வார்சுக் கிரமம் சொல்லப்பட்டிருக்கின்றது.

## வயிற்றிலிருக்கும் குழந்தை

வயிற்றிலிருக்கும் குழந்தை பிறகு உயிருடன் பிறந்தால், சொத்தை உடையவர் இறந்து போகும் போது அக்குழந்தை பிறந்திருந்தால் எப்படியோ, அப்படியே அக்குழந்தைக்கும் வார்சுபாத்தியம் உண்டு.

## விபசாரத்திலிருக்கும் மனைவிக்கு வார்சு பாத்தியம் இல்லை

திருமணம் ஆனபிறகு, கணவன் உயிருடனிருக்கையில் விபசாரியாக இருந்த மனைவிக்குக் கணவன் சொத்தில் வார்சுபாத்தியம் ஏற்படாது. ஆனால் இவ்விதம் அவள் விபசாரியாக இருந்தாள் என்பது கணவனுக்கும் மனைவிக்கும் நடந்த ஒரு வழக்கில் அது சம்பந்தமாக ஒரு விவாதப் பிரச்னை ஏற்பட்டு அதன் பேரில் கோர்ட்டால் தீர்மானம் செய்யப்பட்டிருக்க வேண்டும். அத் தீர்மானம் அப்பீல் முதலிய நடவடிக்கைகளில் மாற்றப்படாமலிருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் மனைவிக்கு வார்சு பாத்தியம் கிடையாது.

## மறுமணம் செய்து கொண்ட சில விதவைகளுக்கு வார்சு பாத்தியம் இல்லை.

வார்சு பாத்தியம் ஏற்படும் போது அடியில் கண்ட விதவைகள் மறுமணம் செய்து கொண்டிருந்தால் அவர்களுக்கு இறந்த இந்துவின் சொத்தில் வார்சு பாத்தியம் கிடையாது. அவர்களாவன:—முன்பே இறந்த மகனுடைய விதவை; தகப்பனின் விதவை; சகோதரரின் விதவை இவர்கள்.

187732
சென்னை 600.008

சென்ற இதழ் தொடர்ச்சி.




# தொழிற்சாலைச் சட்டம்

(விதிகள், அறிக்கைகளுடன் விளக்கம்.)

[தொழிற்சாலைச் சட்டம் (The Factories Act—1948) என்பது 1948ஆம் வருடத்திய 63ஆவது மத்தியச் சட்டம். இச்சட்டம் 1—4—1949 முதல் அமுலுக்கு வந்தது. இச் சட்ட ஷரத்துக்களும், அதை அனுசரித்துச் சென்னைச் சர்க்காரால் இயற்றப்பட்டுள்ள விதிகளும் "வக்கீல்"—1954 ஜனவரி இதழ் முதல் தொடர்ச்சியாக விளக்கம் செய்யப்பட்டு வருகிறது. இதிலிருப்பது சட்ட விளக்கமே ஒழிய மொழிபெயர்ப்பு அல்ல.]

## 1954 ஆம் வருடத்திய தொழிற்சாலைத் திருத்தச் சட்டம்

சமீபத்தில் தொழிற்சாலைச் சட்டத்தின் பல முக்கிய ஷரத்துக்கள் 1954 ஆம் வருடத்திய 25-ஆவது மத்தியச் சட்டத்தால் திருத்தி அமைக்கப் பட்டிருக்கின்றன. இத்திருத்தச் சட்டத்திற்கு "1954—ஆம் வருடத்திய தொழிற்சாலைத் திருத்தச் சட்டம்" (Factories Amendment Act 1954—என்று பெயர். இத் திருத்தச் சட்டத்திற்கு 7-5-1954ல் ஜனாதிபதி அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்டு, அத் தேதி முதல் இது அமுலுக்கு வந்து விட்டது. "வக்கீல்" பத்திரிகையில் அடுத்தபடியாகத் தொடர்ந்து விளக்கப்படவேண்டிய தொழிற் சாலைச் சட்டத்தின் "சம்பளத்துடன் வருடாந்தர (லீவு) விடுமுறை" என்ற 8 ஆவது அத்தியாயம் முழுமையும் புதிதாகத் திருத்தி அமைக்கப்பட்டிருப்பதால் அந்த ஷரத்துக்கள் முதலில் கீழே விளக்கம் செய்யப்பட்டிருக்கின்றன.

### "சம்பளத்துடன் வருடாந்தர (லீவு) விடுமுறை" புதிய திருத்தச் சட்ட ஷரத்துக்கள். அத்தியாயம் 8.

முன்பு இருந்த 8 ஆவது அத்தியாயத்தின் தலையங்கம் "சம்பளத்துடன் விடுமுறை" என்று இருந்ததை "சம்பளத்துடன் வருடாந்தர விடுமுறை" என்று இத்திருத்தச் சட்டத்தால் மாற்றப்பட்டிருக்கிறது.

இந்த அத்தியாயத்தில் கண்டிருக்கும் ஷரத்துக்கள் எல்லாம், வேறு சட்டப்படிக்கோ, அல்லது மத்தியஸ்தத் தீர்ப்பின் படிக்கோ, அல்லது வேலை ஒப்பந்தப்படிக்கோ, ஒரு தொழிலாளருக்குக் கிடைக்கக் கூடிய உரிமைகளுக்கு முரணாக ஏற்புறுத்தப்பட மாட்டா.

செக்ஷன் 78

மேலும் மேற்கண்ட மத்தியஸ்தத் தீர்ப்பின் படிக்கோ, வேலை ஒப்பந்தப் படிக்கோ தொழிலாளருக்குச் சம்பளத்துடன் அதிக நாட்கள் வருடாந்தர விடுமுறை கொடுக்கப்பட்டிருந்தால், அவ்வித அதிகமான விடுமுறையை அடைய தொழிலாளருக்கு உரிமை உண்டு.

மேலும், சர்க்காரால் நிர்வாகம் செய்யப்படும் ரயில்வே தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, மத்திய சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறை சம்பந்தமான விதிகள் ஏற்பட்டிருந்தால், அவ்விதத் தொழிலாளர்களுக்கு இந்த அத்தியாயத்தில் கண்டிருக்கும் ஷரத்துக்கள் பொருந்தமாட்டா.

### சம்பளத்துடன் வருடாந்தர விடுமுறை (லீவு) நாட்கள் எவ்வளவு?

ஒரு வருடத்தில், அதாவது ஜனவரி மாதம் முதல் தேதி முதல் ஆரம்பமாகும் ஒரு வருடத்தில் (Calendar year) ஒரு தொழிற்சாலையில் 240 அல்லது அதற்கு அதிகமான நாட்கள் வேலை செய்திருக்கும் ஒரு தொழிலாளருக்கு, அடுத்த வருடத்தில், (அதாவது அடுத்த ஜனவரி மாதம் முதல் தேதி முதல் ஆரம்பமாகும் வருடத்தில்) கீழே கண்டபடி சம்பளத்துடன் விடுமுறை (லீவு) நாட்கள் அளிக்கப்படவேண்டும்.

செக்ஷன் 79

(1) வயது வந்த, (அதாவது 18 வயது பூர்த்தியான) தொழிலாளராக இருந்தால், அவர் முந்திய வருடத்தில் வேலை செய்திருக்கும் ஒவ்வொரு 20 நாட்களுக்கும் ஒரு நாள் வீதம் சம்பளத்துடன் லீவு எடுக்கலாம். (2) குழந்தைத்

தொழிலாளராக இருந்தால், முந்திய வருடத்தில் வேலை செய்திருக்கும் ஒவ்வொரு 15 நாட்களுக்கும் ஒரு நாள் வீதம் சம்பளத்துடன் லீவு எடுக்கலாம்.

## 240 நாட்களை எப்படி கணக்குச் செய்வது.

தொழிலாளர் வேலை செய்யும் நாட்களுடன் கீழே கண்ட நாட்களையும் சேர்த்துக் கூட்டி, மொத்தம் 240 நாட்கள் அல்லது அதிகமான நாட்கள் ஆனால் போதும். அதாவது:—(1) ஒப்பந்தப்படியோ அல்லது விதிகளின்படியோ தொழிற்சாலையில் வேலை நடத்த முடியாமல் மூடப்பட்டிருக்கும் நாட்களையும் (Lay off) (2) ஸ்திரீ தொழிலாளர் கர்ப்பமாக இருக்கும் போது எடுத்துக்கொள்ளும் லீவு நாட்களையும்—(இதில் 12 வாரங்களுக்கு அதிகப்படாத லீவு நாட்களைத்தான் சேர்த்துக் கொள்ளலாம்) (3) தொழிலாளர் எந்த வருடத்தில் லீவு எடுக்கிறாரோ அதற்கு முந்திய வருடத்தில் அவருக்குள்ள லீவு நாட்கள் — இம்மூன்று இனங்களையும் கூட்டிக்கொண்டு, ஒரு தொழிலாளர் அவ்வருடத்தில் குறைந்தது 240 நாட்கள் வேலை செய்திருக்கிறாரா என்று பார்க்கவேண்டும். ஆனால் இந்த நாட்களுக்கு வீதாசாரமான லீவு நாட்கள் கிடையாது.

## விடுமுறை நாட்களை நீக்கி லீவு நாட்கள் உண்டு.

சம்பளத்துடன் வருடாந்தர லீவு நாட்கள் ஆரம்பிப்பதற்கு முந்தியோ, முடிந்த பின்போ, அல்லது நடுவிலோ வரும் விடுமுறை நாட்களை (Holidays) நீக்கி ஒரு தொழிலாளருக்குச் சம்பளத்துடன் வருடாந்தர லீவுநாட்கள் உண்டு.

## வருட நடுவில் வேலை செய்ய ஆரம்பிக்கும் தொழிலாளருக்குச் சம்பளத்துடன் லீவு நாட்கள் எவ்வளவு?

இத் திருத்தச் சட்டப்படி இச் சந்தர்ப்பத்தில் 'வருடம்' (Calendar year) என்பது ஜனவரி மாதம் முதல் தேதி முதல் ஆரம்பமாகும் ஒரு வருடத்தைத்தான் குறிக்கும் என்பதைக் கவனித்தோம்.

ஜனவரி மாதம் முதல் தேதிக்குப் பிறகு வேலைசெய்ய ஆரம்பிக்கும் ஒரு தொழிலாளரும், அவ்வருடத்தில் பாக்கி இருக்கும் மொத்த நாட்களில் குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு நாட்களில் வேலை செய்திருந்தால் அவருக்கும் மேலே கண்ட வீதாசாரப்படி லீவு நாட்கள் உண்டு; அதாவது வயது வந்த தொழிலாளராக இருந்தால் அவர் வேலை செய்த 20 நாட்களுக்கு 1 நாள் வீதமும்; குழந்தையாக இருந்தால் 15 நாட்களுக்கு 1 நாள் வீதமும் லீவு உண்டு.

## வருட மத்தியில் வேலையிலிருந்து நிறுத்தப்பட்ட தொழிலாளருக்கும், நீக்கப்பட்ட தொழிலாளருக்கும் லீவு உண்டு.

வருடமத்தியில் ஒரு தொழிலாளர் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டாலும் (Discharged) அல்லது நீக்கப்பட்டாலும் (Dismissed) அவர் மேலேகண்ட மொத்த நாட்களுக்கு வேலை செய்யாமலிருந்தாலும், அவர் வேலை செய்த நாட்களுக்கு மேலேகண்ட வீதாசாரப்படி லீவு நாட்கள் உண்டு.

## லீவு நாட்களில் பின்னங்கள்

இந்த ஷரத்தின்படி லீவு நாட்கள் கணக்குச் செய்வதில் ஒரு நாளில் அரை அல்லது அதிகமான பாகத்திற்கு எடுக்கப்படும் லீவை ஒரு முழு நாளாகவும், அரை நாளுக்குக் குறைவாக எடுக்கப்படும் லீவை விட்டு விட்டும் கணக்குச் செய்ய வேண்டும்.

## ஒரு வருடத்தில் முழு லீவும் எடுக்காவிட்டாலும்; லீவு மறுக்கப்பட்டாலும்.

ஒரு தொழிலாளர் ஒரு வருடத்தில் எடுத்துக் கொள்ளக்கூடிய லீவு முழுமையும் எடுத்துக் கொள்ளாவிட்டாலும், அவர் எடுத்துக்கொள்ளக் கூடிய பாக்கி லீவு நாட்களை அதற்கடுத்த வருடத்தில் அவருக்குள்ள லீவு நாட்களுடன் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் இவ்விதம் அடுத்த வருடத்தில் சேர்த்துக்கொள்ளக்கூடிய லீவு நாட்களை வயது வந்த தொழிலாளராக இருந்தால் 30 நாட்களுக்கு மேலும், குழந்தைத் தொழிலாளராக இருந்தால் 40 நாட்களுக்கு மேலும் சேர்த்து வைத்துக்கொள்ள முடியாது. இருந்தாலும் ஒரு தொழிலாளர் சம்பளத்துடன் தமக்கு லீவு வேண்டுமென்று கேட்டும் அவருக்குக் கீழே விவரிக்கப்படும் திட்டப்படி லீவு கொடுக்க மறுக்கப்பட்டுவிட்டால், அத்தொழிலாளர் தம்முடைய லீவு ஜாடா நாட்களையும் மேலே சொல்லப்பட்ட வரம்பு இல்லாமல் எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் சேர்த்து வைத்துக்கொண்டு, பிந்திய வருடங்களில் அவ்வித லீவுநாட்களை உபயோகப் படுத்திக்கொள்ளலாம்.

## எப்படி லீவு கேட்பது?

ஒரு தொழிலாளர் மேலே சொன்னபடி சம்பளத்துடன் தமக்குரிய லீவை எடுத்துக்கொள்ள

விரும்பினால், எந்தத் தேதி முதல் அவருக்கு லீவு வேண்டுமோ, அதற்குக் குறைந்தது 15 நாட்களுக்குமுன்பே தமக்குள்ள ஜாடா லீவுமோ அல்லது அதன் பாகமோ வேண்டுமென்று கோரி எழுத்து மூலம் லீவு மனு எழுதி, தொழிற்சாலை மானேஜரிடம் கொடுக்க வேண்டும்.

1947ஆம் வருடத்திய தொழில் தகாராறுச் சட்டத்தின் (Industrial Disputes Act 1947) செக்ஷன் 2 (n) என்ற ஷரத்தில் பொது உபயோகச் சேவைகள் (Public Utility Service) என்று குறிப்பிடப்படும் தொழில்களில் வேலை செய்யும் தொழிலாளர் தாம் லீவு எடுத்துக்கொள்ள விரும்பும் தேதிக்குக் குறைந்தது 30 நாட்களுக்கு முன்னதாகவே மேலே கண்டபடி லீவு மனுசெய்து கொள்ளவேண்டும்.

மேலும் ஒரு தொழிலாளருக்குரிய லீவை எந்த வருடத்திலும் அவர் மூன்று தடவைகளுக்கு மேல் எடுத்துக்கொள்ளக் கூடாது.

## தேக அசௌக்கியம் காரணமாக லீவு

ஒரு தொழிலாளர் தேக அசௌக்கியம் காரணமாகத் தமக்குச் சம்பளத்துடனுள்ள லீவு நாட்களைப் பயன்படுத்திக் கொள்ள இஷ்டப்பட்டால், மேலே கண்டபடி 15 அல்லது 30 நாள் அவகாசம் கொடுக்காமலே லீவு எடுத்துக் கொள்ளலாம்.

## ஒவ்வொரு தொழிற்சாலையும் 'லீவு' கொடுப்பதுபற்றிய திட்டம் வகுத்துக் கொள்ளலாம்

'லீவு' சம்பந்தமான இந்த ஷரத்துக்களின்படி ஒரு தொழிலாளருக்குச் சம்பளத்துடன் லீவு கொடுப்பதை ஒழுங்கு செய்வதற்கான ஒரு திட்டத்தை (Scheme) தொழிற்சாலை நிர்வாகஸ்தர்கள் வகுத்து, அதை தொழிற்சாலை சீப் இன்ஸ்பெக்டரிடம் பதியவைக்கலாம். இவ்விதத் திட்டத்தை 1947ஆம் வருடத்திய தொழில் தகாராறுச் சட்டத்தின் 3ஆவது செக்ஷன்படி அமைக்கப்பட்ட அத்தொழிற்சாலைக் காரியக் கமிட்டி (Works Committee)புடன் கலந்தோ, அல்லது வேறு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட அதேவிதமான கமிட்டியுடன் கலந்தோ, அல்லது இதற்கான விதிகளின்படி தேர்ந்தெடுக்கப்படும் தொழிலாளர் பிரதிநிதிகளுடன் கலந்தோ, தொழிற்சாலைக்காரர்கள் மேற்கண்ட திட்டத்தை வகுக்கவேண்டும். இவ்விதத் திட்டத்தைத் தொழிற்சாலையின் முக்கிய இடங்களில் பகிரங்கமாகப் பிரசுரப்படுத்தி வைக்கவேண்டும். இத்திட்டம் 12 மாதங்களுக்கு அமுலில் இருக்கும். அதே திட்டத்தை மாறுதல்கள் செய்தோ, அப்படியேயோ மேற்கண்ட தொழிலாளர்கள் பிரதிநிதிகளுடன் அதேவிதம் கலந்து மறுபடியும 12 மாதங்களுக்கு அமுலில் இருக்கும்படி புதுப்பித்துக் கொள்ளலாம். இவ்விதம் புதுப்பித்த விஷயத்தைத் தொழிற்சாலை சீப் இன்ஸ்பெக்டருக்கும் தெரிவித்து விடவேண்டும்.

சரியான கெடுவுக்கு முன்பே லீவு கேட்டுப் போடப்படும் மனுவைக் கொடுக்கத் தொழிற்சாலைக்காரர்கள் மறக்கக் கூடாது; ஆனால் மேலே கண்ட திட்ட ஷரத்துக்களை அனுசரித்து லீவு கொடுப்பதை மறுக்கவும் தொழிற்சாலைக்காரர்களுக்கு உரிமை உண்டு.

## லீவு எடுக்குமுன் நீக்கப்படும் தொழிலாளருடைய லீவுச் சம்பளம்

ஒரு தொழிலாளர் சம்பளத்துடன் எடுக்கக் கூடிய லீவு பூராவையும் எடுக்கு முன்பே அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டால் அவருடைய லீவு நாட்களுக்கான சம்பளம் அடுத்த இரண்டு நாட்களுக்குள் அவரிடம் கொடுக்கப்படவேண்டும். ஒரு தொழிலாளர் லீவு கேட்டு, அது மறுக்கப்பட்டதால் அத்தொழிலாளர் தாமே வேலையிலிருந்து விலகிக்கொண்டு விட்டால், அவருடைய லீவு நாட்களுக்கான சம்பளம் அவரிடம் அடுத்த நாளுக்குள் கொடுக்கப்படவேண்டும்.

ஒரு தொழிலாளரை வேலையை விட்டு நீக்குவதற்குமுன் அவருக்கு முன்னதாகவே நோட்டீஸ் கொடுக்கவேண்டியிருந்தால், அத்தொழிலாளர் எடுத்துக் கொள்ளாமல் பாக்கி வைத்திருக்கும் லீவு நாட்களை நோட்டீஸ் கொடுக்கப்படவேண்டிய கெடு கணக்குச் செய்வதில் சேர்த்துக் கொள்ளக் கூடாது.

## லீவுச் சம்பளம்

லீவு எடுப்பதற்கு முன்பு உள்ள ஒரு மாதத்தில் அத் தொழிலாளருக்கு தினசரி சராசரிச் சம்பளம் எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதே விகிதப்படி அத்தொழிலாளர் எடுத்துக் கொள்ளும் லீவு நாட்களுக்கும் அவருக்குச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். மேலே கண்ட சராசரிச் சம்பளம் கணக்குச் செய்வதில் அதிக நேர வேலைச் சம்பளமும் போனசும் சேராது. ஆனால் பஞ்சப்படியும், குறைந்த விலைக்கு உணவுதானியம் முதலிய சாமான்களை அத் தொழிலாளர் சலுகை விலையில் வாங்கக் கூடியதால் ஏற்படும் லாபமும் சேர்த்துக் கொள்ளப்படும். இதை எப்படி கணக்குச் செய்ய வேண்டுமென்று விதிகள் குறிப்பிடும்.

(தொடரும்)



# வழக்கும் தீர்ப்பும்

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி, சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

## தகப்பன் மைனர் மகன் இருவருக்கும் பொதுவான சொத்தை மைனர் மகனுக்கு மட்டில் சொந்தம் போலப் பாவித்துத் தகப்பன் கார்டியன் முறைமையில் அதைக் குத்தகைக்கு விட்டார். தகப்பன் தம் பாகத்தை இழந்ததாக ஏற்பட்டது. சுப்ரீம் கோர்ட்டுத் தீர்ப்பு.

[ஆதாரம்:—1954 (1) மதராஸ் லா ஜர்னல் 714.]

பாரம்மா, பம்பம்மா என்ற இரண்டு சகோதரிகளுக்குச் சொந்தமாக 9 ஏகர் 49 செண்ட் நஞ்சை நிலம் இருந்தது. பம்பம்மாள் நாகண்ணா என்பவரை மணந்து கொண்டாள். அவருக்கு இரண்டு ஆண்மக்கள் பிறந்தனர். இவர்களுக்குச் சித்தலிங்கண்ணா, சின்னபஸவண்ணா என்று பெயர். பம்பம்மாள் 1923-ல் இறந்தாள். மேலே கண்ட 9 ஏகர் 49 செண்ட் நிலத்தில் அவளுக்குள்ள பாதி வீதத்திற்கு அவளுடைய இரண்டு ஆண்குழந்தைகளே தான் வார்சுகள். பம்பம்மாள் இறந்த பிறகு இக்குழந்தைகளை அவளுடைய சகோதரியான பாரம்மா தன்னுடன் வைத்துக் கொண்டு வளர்த்து வந்தாள். அத்துடனில்லை. மேற்கண்ட சொத்தில் தனக்குள்ள பாதி பாகத்தையும் பாரம்மாள் இக்குழந்தைகள் இருவருக்குமே 22-6-1923 தேதியில் ஒரு செட்டில்மெண்ட் மூலம் எழுதிக் கொடுத்து விட்டாள். அதாவது மேலே கண்ட 9 ஏகர் 49 செண்டு நிலமும், இந்த இரண்டு ஆண்குழந்தைகளுக்கே பூராவும் சொந்தமாகி விட்டது.

இக்குழந்தைகளின் தகப்பன் நாகண்ணா இரண்டாவது கலியாணம் செய்து கொண்டு தனியே இருந்து வந்தார். இந்நிலைமையில் முதல் குழந்தையான சித்தலிங்கண்ணா என்பவன் 1924-ல் இறந்து விட்டான். இந்தச் சட்டப்படி இறந்த இக்குழந்தையின் பாகத்திற்குத் தகப்பன் தான் வார்சு. ஆகையால் மேலே கண்ட 9 ஏகர் 49 செண்டு நிலமும் இரண்டாவது குழந்தையான சின்ன பஸவண்ணாவுக்கும், தகப்பன் நாகண்ணாவுக்கும் சம்பாத்தியமுள்ள பொதுச் சொத்தாகி விட்டது.

இந்த நிலைமையில் 25-8-1926-ல் இந்த நிலங்கள் ஜாடாவையும் தகப்பன் 12 வருடங்களுக்குப் பாரம்பாவிடமே குத்தகைக்கு விட்டார். வருடக் குத்தகை ரூ. 500. குத்தகைப் பத்திரத்தில், ஜாடா நிலமும் மைனர் சின்ன பஸவண்ணாவுக்கே சொந்தம் என்றும், மைனருடைய கார்டியன் முறைமையில் தாம் அந்த நிலங்களைக் குத்தகைக்கு விடுவதாகவும் கண்டிருந்தது. அதாவது, சட்டப்படி ஜாடா நிலமும் தகப்பன் மைனர் மகன் இருவருக்கும் சொந்தமாக இருந்தாலும், எல்லாம் மைனர் மகனுக்கு மட்டில் சொந்தம் போலக் கண்டு இக் குத்தகைப் பத்திரம் எழுதப்பட்டது. குத்தகைத் தொகைகளுக்கு 1927, 1932 இந்த வருடங்களில் கொடுக்கப்பட்ட ரசீதுகளும் மைனர்கார்டியன் என்ற முறையிலேயே தகப்பனால் கொடுக்கப்பட்டன. மேலும் 1934-ல் மைனருக்காக ஒரு வருடக் குத்தகைத் தொகையை வசூல் செய்யத் தகப்பன் கோர்ட்டில் ஒரு தாவாவும் போட நேர்ந்தது.

இந்த நிலைமையில் 1935-ல் நாகண்ணாவுக்குப் பணக் கஷ்டம் ஏற்பட்டது. சொத்தைப் பெந்தகம் வைத்துக் கடன் வாங்க நிச்சயம் செய்தார். பெந்தகம் வைக்கச் சொத்து எது? அவருக்கு ஞாபகம் வந்தது. தம்முடைய இறந்த மகனுக்கு 9 ஏகர் 49 செண்டு நிலத்தில் பாதி வீதம் இருந்ததே. அவன் இறந்த பிறகு அப்பாதி வீதத்திற்குத் தாம் தானே சட்டப்படி வார்சு.

ஆகையால் அப்பாதி வீதத்தை ரூ. 3000-க்குப் பெந்தகமாக வைத்துக் கடன் வாங்கினார். பிறகு 1936-ல் அதே பாதி பாகத்தைக் கடன் கொடுத்தவருக்கே பெந்தகக் கடன் தொகைக்காகவே சாட்டுதல் போட்டு விற்றும் விட்டார். விற்று விட்டாலும் சொத்தின் சுவாதீனம் அவரிடமில்லை. குத்தகைதாரிடமே இருந்தது. சொத்து வாங்கியவரும் அதை வேறு ஒருவருக்கு 1944-ல் விற்று விட்டார். புதிதாகச் சொத்து வாங்கியவர் ஜாடா சொத்துக்களையும் வைத்திருந்த சின்ன பஸவண்ணு (இவர் இதற்குள் மேஜராகி விட்டார்,) மீது பாகவ்யாஜ்யம் தொடர்ந்தார். அதாவது சொத்துக்கள் சின்ன பஸவண்ணுவுக்கும் அவருடைய தகப்பன் நாகண்ணுவுக்கும் சமபாகமுள்ள சொத்துக்கள் என்றும், தகப்பனுடைய பாதி பாகத்தை ஒருவர் விலைக்கு வாங்கி அவரிடமிருந்து தாம் விலைக்கு வாங்கி இருப்பதாகவும் ஆகையால் சொத்தை இரண்டு பாகங்களாகப் பிரித்துத் தம்மிடம் பாதி பாகம் ஒப்படைக்க வேண்டுமென்றும் அவர் தாவா தொடர்ந்திருந்தார். மகன் முதல் பிரதி வாதி. சொத்தை விற்ற தகப்பன் இரண்டாம் பிரதிவாதி.

மகன் கட்சி ஆடினார். மற்றக் கட்சிகளை எல்லாம் நாம் இங்குக் கவனிக்க வேண்டியதில்லை. கடைசி வரை வாதாடப் பட்டு, சுப்ரீம் கோர்ட்டால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்சி ஒன்றை மட்டில் கவனிப்போம்.

முதலில் சொத்துக்கள் தகப்பனுக்கும் மகனுக்கும் சம பாத்தியமுள்ள பொதுச் சொத்தாக இருந்தாலும், 1926-ல் அதைக் குத்தகைக்கு விடும்போது ஜாடா சொத்துக்களும் மைனர் மகனுக்கு மட்டில் சொந்தம் போலவே பாவித்தும் மைனர் மகனுடைய கார்டியன் என்ற முறைமையில் மட்டில் தகப்பனானவர் குத்தகைப் பத்திரம் எழுதி வாங்கினார். தமக்கு இச் சொத்தில் சொந்த முறைமையில் எவ்வித பாத்தியமுமில்லை என்பதை இக் குத்தகைப் பத்திரம் வாங்குவதன் மூலம் தகப்பன் ஒப்புக்கொண்டது போலாகும். 1926 லிருந்து குத்தகைதாரே 12 வருடங்களுக்கு மேலாக இச் சொத்தை அனுபவித்திருக்கிறார். குத்தகைதார் அனுபவிப்பதானது சட்டத்தில் குத்தகைக்கு விட்டவர் அனுபவிப்பது போலவே தான். ஆகையால் மைனர் மகன் மட்டில் ஜாடா சொத்தையும் 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாய், ஏகதேசத்தில் அனுபவித்தது போலவே ஆகும். தகப்பனுடைய பாத்தியத்திற்கு விரோதமாகப் பன்னிரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு இச்சொத்தை அனுபவித்த மகனே ஜாடா சொத்துக்களுக்கும் ஏகதேச உரிமையுள்ளவராகி விட்டார். தகப்பன் தம்முடைய சொந்தப் பாத்தியத்தை இழந்துவிட்டார். ஒரு சொத்தானது பொதுவில் இரண்டு பாகஸ்தர்களுக்குச் சொந்தமாக இருந்தால், ஒரு பாகஸ்தருடைய அனுபோகமானது மற்றப் பாகஸ்தருடைய சார்பிலும் அனுபவித்ததாகச் சட்டத்தில் பாவிக்கப்பட வேண்டுமென்று ஒரு சட்ட விதி இருக்கிறது. ஆனால் ஒரு பாகஸ்தரைப் பொதுச் சொத்தில் உள்ளே விடாமல் தடுத்து மற்றப் பாகஸ்தர் மட்டில் அனுபவிப்பதற்கு இவ்விதி பொருந்தாது. அதாவது அப்படித் தடை செய்து (Ouster)த் தனிமையில் அனுபவிக்கும் பாகஸ்தருக்கு அனுபோகபாத்தியம் சித்தித்து விடும். இங்கே தகப்பனைத் தடை செய்து மகன் மட்டில் அனுபவித்தால் எப்படியோ அப்படியே தான். ஆகையால் ஜாடா சொத்துக்களும் மகனுக்கே உரிமையாகி விட்டபடியால், தகப்பன், தமக்கு பாகமிருப்பது போல் விற்பனை செய்தது செல்லாதென மகனுடைய கட்சி.

இக் கட்சியை ஜில்லா ஜட்ஜ் ஏற்றுக் கொண்டு சொத்து வாங்கியவர் செய்த பாக வியாஜ்யம் தள்ளப்பட்டது. ஆனால் ஹைகோர்ட்டில் இக் கட்சி ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மகன் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். சுப்ரீம் கோர்ட்டார் ஹைகோர்ட்டின் தீர்ப்பை மாற்றி மேலே கண்டபடி சட்ட விளக்கம் செய்து சொத்து ஜாடாவும் மகனுடையதாய் விட்டதெனத் தீர்ப்பளித்தனர்.

தகப்பன் மைனர் கார்டியன் முறைமையில் சொத்துக்களைக் குத்தகைக்கு விட்டது 1926-ல் அதிலிருந்து 12 வருடங்கள் முடிவதற்குள் அதாவது 1935-ல் தகப்பன் தன்னுடைய பாதி பாத்தியத்தைப் பெந்தகமாக வைத்து விட்டபடியால், 12 வருட அனுபோக பாத்தியம் நடுவில் தடைப்பட்டுப் போய் விட்டதென்றும், மகனுக்கு அனுபோக பாத்தியம் சித்திக்கவில்லை என்றும் சொத்து வாங்கியவருக்காக வாதாடப் பட்டது. இதைச் சுப்ரீம் கோர்ட்டார் ஏற்றுக் கொள்ளவில்லை. சட்டப்படி சொத்துக்களின் அனுபோகமானது மகனிடமே ஏகதேசத்தில் இருக்கும் போது, தகப்பன் சொத்தின் அனுபோகத்தைக் கைப்பற்றாமல் தம்முடைய மனதில் மட்டில் தமக்குப் பாதி பாத்தியமிருப்பது போல் தீர்மானித்து அதைப் பெந்தகம் வைத்து விட்டதால் அனுபோக பாத்தியம் தடைப் படாது. அனுபோக பாத்தியம் தடைப்பட வேண்டுமானால் சொத்தை அவர் மறுபடியும் அனுபவிக்கவேண்டும். ஆகையால் 1935-ல் தகப்பன் வைத்த பெந்தகத்தினால் மகனிடம் இருக்கும் அனுபோக பாத்தியம் நடுவில் தடைப்பட்டு விட்டதாக ஏற்படாது. சொத்தின் அனுபோகத்தை இழந்தவர், தம்முடைய மனதில்

அச்சொத்துத் தம்முடையதென்று மறுபடியும் தீர்மானம் செய்து கொள்ளுவது மட்டில் போதாது ; காலாவதிக்குள் தம்முடைய பாத்தியம் திரும்ப வேண்டுமானால் அவர் சொத்தின் அனுபோகத்தைத் தம்மிடம் திருப்பிக் கொள்ள வேண்டும். அது முடியா விட்டால் 12 வருடங்களுக்குள் சொத்துக் கிடைக்கக் கோர்ட்டில் தாவா செய்ய வேண்டும்.

இவ்வழக்கில் தம்முடைய மைனர் மகனுக்குக் கார்டியன் முறைமையில் தகப்பன் குத்தகைப் பத்திரம் எழுதி வாங்கி இருந்தாலும், மகன் மட்டில் தகப்பனுடைய பாத்தியத்துக்கு விரோதமாகச் சொத்துக்களை அனுபவித்தது போல் ஏற்பட்டு, மகனே அனுபோக பாத்தியத்தால் ஜாடா சொத்துக்களுக்கும் சொந்தக்காரராகி விட்டார்.

## பரீட்சையில் போதுமான 'மார்க்' வாங்கியும் 'பாஸ்' ஆகாத மாணவர் ஹைகோர்ட்டில் 'ரிட்' மனுக் கொடுத்து தேறியவர்கள் ஜாப்தாவில் தாமும் சேர்ந்து கொண்டார்

[ஆதாரம்:— 1954-ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—அஸாம்—65.]

இம்மாணவர் பி.எஸ்ஸி (B.Sc. Agriculture) என்ற பரீட்சைக்கு எழுதினர். பரீட்சையானது கௌஹாதி சர்வகலா சாலையால் நடத்தப்பட்டது. பரீட்சையின் முடிவு பிரசுரம் செய்யப்பட்டபோது, இம்மாணவருடைய பெயர் தேறினவர்களின் ஜாப்தாவில் வரவில்லை. உடனே இம்மாணவர் சர்வகலாசாலை அதிகாரிகளுக்கு எழுதி, தம்முடைய மார்க்குகள் எவ்வளவு என்ற அத்தாட்சிச் சீட்டை வாங்கிப் பார்த்தார். மொத்தம் 2400 மார்க்குகளுக்கு இம்மாணவர் 1172 மார்க்குகள் வாங்கி இருந்தார். அதாவது 100க்கு 48 மார்க்குகளுக்கு மேல் வாங்கி இருந்தார். இரண்டாம் வகுப்பில் 'பாஸ்' ஆகவே இந்த மார்க்குகள் போதும். பரீட்சையில் தேற எவ்வளவு மார்க்குகள் வாங்க வேண்டுமென்று அந்த சர்வகலாசாலை விதிகள் சில இருக்கின்றன. அவைகளின்படி ஒவ்வொரு பாடப் பகுதியிலும் (Subject) ஒரு மாணவர் குறைந்தது 30 சதவிகிதம் மார்க்குகள் வாங்கி, மொத்தத்தில் 35 சதவிகிதமாவது மார்க்குகள் வாங்கிய மாணவர்கள்தான் தேறினவர்களாவார்கள். 45 சதவிகிதத்திற்கு மேல் மார்க்கு வாங்கினால் இரண்டாம் வகுப்பிலும், 60 சதவிகிதத்திற்கு மேல் மார்க்கு வாங்குபவர்கள் முதல் வகுப்பிலும் தேற முடியும். இப்படிப் பார்த்தால் இம்மாணவர் எல்லாப் பாடப் பகுதிகளிலும் 30 சதவிகிதத்திற்குமேல்மார்க்கு வாங்கி இருந்தார். ஆனால் ஒரு விஷயத்தில் மட்டில் இரண்டு கேள்வித்தாள்கள் இருந்தன. ஒவ்வொன்றுக்கும் மொத்தம் 100 மார்க்குஉண்டு. இவற்றில் ஒன்றில் மட்டில் இம்மாணவருக்கு 51 மார்க்கும் மற்றொன்றில் 28 மார்க்கும் கிடைத்திருந்தது. மொத்தம் இவ்விஷயத்தில் கொடுத்த இரண்டு கேள்வித் தாள்களிலும் 200க்கு 79 மார்க்குகள் வந்திருந்தன. ஆனால் ஒரு கேள்வித்தாளில் 30 சதவிகிதத்திற்குக் குறைந்து விட்டபடியால் இம்மாணவர் பரீட்சையில் தேறவில்லை என்று சர்வகலாசாலைக்காரர்கள் இம்மாணவரை பரீட்சை தேறினவர் ஜாப்தாவில் சேர்க்கவில்லை இவ்விதம் செய்தது சரி அல்ல என்றும் தாம் உண்மையில் பரீட்சையில் தேறுவதற்குப் போதுமான மார்க்குகள் வாங்கி இருப்பதால் தமக்கும் இரண்டாம் வகுப்பில் பி. எஸ்ஸி பரிட்சை பாசாகி விட்டதாக ஜாப்தாவில் சேர்த்துக் கொள்ளும்படி சர்வகலாசாலைக்கு ஒரு கட்டளை (writ of Mandamus) பிறப்பிக்க வேண்டுமென்றும் இம்மாணவர் அஸாம் ஹைகோர்ட்டுக்கு ஒரு 'ரிட்' மனுச் செய்துகொண்டார்.

ஹைகோர்ட் உயர் நீதிபதிகள் இருவர் இந்தச் சர்வகலாசாலை விதிகளை எல்லாம் கவனித்து ஆராய்ந்து பார்த்து, சர்வகலாசாலைக்காரர்கள் செய்த முடிவு தவறு என்று அபிப்பிராயப்பட்டனர். மொத்தம் 11 விஷயங்களில் பரீட்சை உண்டென்றும், சில விஷயங்களில் ஒரே ஒரு கேள்வித்தாளும், சில விஷயங்களில் இரண்டு கேள்வித்தாள்களும் மொத்தம் 15 கேள்வித்தாள்களும் இருந்தாலும் விஷயங்கள் 11 தான் என்றும, 30 சதவிகிதத்திற்குக் குறையாமல் மார்க்கு வாங்க வேண்டுமென்பது ஒவ்வொரு விஷயத்திறகும் கணக்குச் செய்ய வேண்டுமே ஒழிய, ஒவ்வொரு கேள்வித்தாளுக்கும் அப்படி மார்க்கு வாங்க வேண்டுமென்ற விதிகளுக்கு அர்த்தம் செய்ய முடியாதென்றும், அப்படிச் சர்வகலாசாலையினர் அர்த்தம் செய்தது தவறு என்றும் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

இச்சந்தர்ப்பத்தில் சட்டத்தால் தாங்கள் செய்ய வேண்டிய ஒரு பொதுக் கடமையைச் சர்வகலாசாலைக்காரர்கள் செய்யத் தவறிவிட்டதால், அப்படிச் செய்யும்படி கட்டளை இட ஹைகோர்ட்டுக்கு உரிமை உண்டென்றும் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

இம்மாணவர் பரீட்சையில் தேறினது மட்டும் அல்லாமல் இரண்டாம் வகுப்பில் தேறி விட்டதாக அவருடைய பெயரையும் 'பாஸ்' ஜாப்தாவில் சேர்த்துக் கொள்ளும்படி ஹைகோர்ட்டார் சர்வகலாசாலையினருக்குக் கட்டளை ஒன்று பிறப்பித்தனர்.

**சர்க்காரின் வசமுள்ள தஸ்தா வேஜுகளைக் கோர்ட்டில் தாகல் செய்யும்படி ஒரு வழக்கில் சம்மன் செய்யப்பட்டால், முடியாதென்று சொல்ல எந்த அதிகாரிக்கு உரிமை உண்டு? கலெக்டருக்கா, காரியதரிசிக்கா, அல்லது மந்திரிக்கா?**

[ஆதாரம்:— 67 லா வீக்லி 533.]

சையது அப்துர் ரஹிமான் என்பவர் கோட்டயம் தாலூக்காவில் உணவு தானிய மொத்த வியாபாரி. இவர் சர்க்காருடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி உணவு தானியங்களை ஒரு இடமிருந்து வேறு இடங்களுக்கு ஏற்றிச் செல்லுவதற்கான போக்கு வரத்துச் செலவுகள் தமக்குச் சர்க்காரிடமிருந்து கிடைக்க வேண்டுமென்று சர்க்கார் மீது கள்ளிக்கோட்டை சப் கோர்ட்டில் இவர் ஒரு தாவா செய்தார். சர்க்காரிடமிருக்கும் சில தஸ்தாவேஜுகளை அவர்கள் கோர்ட்டில் தாகல் செய்ய வேண்டுமென்றும் இவர் கோர்ட்டில் ஒரு மனுப் போட்டார். அத் தஸ்தாவேஜுகள் சர்க்கார் திறப்பில் கோர்ட்டில் தாகல் செய்யப்பட்டன. ஆனால் விசாரணைக் காலத்தில் இந்த தஸ்தாவேஜுகளை ருசுவாக ஏற்றுக் கொள்ள அனுமதிக்க கூடாதென்று சர்க்கார் ஆட்சேபித்தனர்.

ஏனென்றால் இந்திய ருசுச் சட்டத்தில் (Indian Evidence Act) இது சம்பந்தமாக ஒரு விதி இருக்கிறது. அதாவது:— சம்பந்தப்பட்ட இலாகாவின் தலைமை அதிகாரியின் அனுமதியின்றி அரசாங்க விஷயங்கள் சம்பந்தமான பிரசுரம் செய்யப்படாத தஸ்தவேஜுகளை எவரும் ருசுவாக கோர அனுமதிக்கப்பட மாட்டார். தலைமை அதிகாரியானவர் யுக்தம் போல் அனுமதி கொடுத்தாலும் கொடுக்கலாம்; அனுமதி கொடுக்க மறுத்தாலும் மறுக்கலாம் — என்று செக்ஷன் 123 ல் இருக்கிறது. இந்த ஷரத்தை ஆதாரமாகக் கொண்டு இத்தஸ்தாவேஜுகளை ருசுவாக ஏற்றுக் கொள்ளக் கூடாதென்று ஜில்லா கலெக்டர் ஆட்சேபித்து ஒரு பிரமாணப் பத்திரிகையும் தாகல் செய்தார். இத்தஸ்தாவேஜுகள் கலெக்டர் ஆபீசில் செய்த சில குறிப்புகளாகவும், கலெக்டருக்கும் அவருடைய சிப்பந்திகளுக்கு மிடையே ஏற்பட்ட கடிதப் போக்கு வரத்துக்களாகவும் இருந்தன. இத் தஸ்தாவேஜுகள் ஒன்றும் "அரசாங்க விஷயங்கள் சம்பந்தமானவை" அல்ல என்றும் வாதிக்கும் சர்க்காருக்கும் வர்த்தக முறையில் ஏற்பட்டவை என்றும் ஆகையால் இவைகளைத் தாகல் செய்ய, சர்க்கார் மறுக்க முடியாதென்றும் வாதி ஆட்சேபித்தார். மேலும் ஆட்சேபிக்கக் கூடிய இலாகா தலைமை அதிகாரி என்பது கலெக்டர் அல்ல என்றும் வாதி ஆட்சேபித்தார்.

இவ்விதம் சர்க்கார் தஸ்தாவேஜுகளைத் தாகல் செய்யவோ, மறுக்கவோ, அனுமதி கொடுக்க வேண்டிய அந்த "இலாகா தலைமை அதிகாரி" என்பது அந்த இலாகா மந்திரிதான் என்று சப் ஜட்ஜ் அவர்கள் அபிப்பிராயப்பட்டு, மந்திரியிடமிருந்து ஆட்சேபனைப் பிரமாணப் பத்திரிகை தாகல் செய்யப்படவேண்டுமென்று உத்தரவிட்டார்.

ஆனால் சர்க்கார் திறப்பில் மந்திரியிடமிருந்து பிரமாணப் பத்திரிகை தாகல் செய்யாமல், உணவு இலாகா சர்க்கார் காரியதரிசியிடமிருந்து பிரமாணப் பத்திரிகை தாகல் செய்யப்பட்டது. சர்க்காரின் ஆட்சேபனையை ஏற்றுக் கொள்ளும்படியும் சர்க்காரால் ஒரு மனுவும் போடப்பட்டது. இதை, சப்ஜட்ஜ் ஏற்றுக் கொள்ளவில்லை. இலாகா தலைமை அதிகாரி என்பது மந்திரியைத்தான் குறிக்குமென்றும் மந்திரியிடமிருந்து பிரமாணப் பத்திரிகை தாகல் செய்யப்படாமையால் சர்க்காரின் மனுவை சப்ஜட்ஜ் தள்ளி விட்டார். அவ்வுத்தரவு சரியல்ல என்று அதன் பேரில் சர்க்கார் சென்னை ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் மனுச் செய்தனர்.

ஹைகோர்ட்டில் உயர் நீதிபதி அவர்கள் இது சம்பந்தமான முந்திய தீர்ப்புகளையும் சட்ட ஷரத்துக்களையும் ஆராய்ச்சி செய்து "இலாகா தலைமை அதிகாரி" என்பது அந்த இலாகா சர்க்கார் காரியதரிசியைத் தான் குறிக்குமென்று அபிப்பிராயப்பட்டு, பிரஸ்தாப வழக்கில் உணவு இலாகா காரியதரிசியால் தாகல் செய்யப்பட்ட ஆட்சேபனைப் பிரமாணப் பத்திரிகையே போதுமென ஏற்றுக்கொண்டு வழக்கை மேல் நடத்தும்படி உயர் நீதிபதி அவர்கள் தீர்ப்பளித்தனர்.






இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் தமிழில் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில் தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவதும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவதும் இயலாது.

## பலதாரத் தடைச் சட்டம்

79. **கேள்வி:** (வடிவேல் செட்டியார்—மாரியம்மன் கோவில்) இந்து ஒருவர் முதல் மனைவி சம்மதம் பெற்று (விவாஹ ரத்துச் செய்து கொள்ளாமல்) மறுமணம் செய்து கொண்டால் இருதார விவாஹத் தடை சட்டப்படி பந்துக்களோ, போலீஸ் அதிகாரிகளோ, மற்றவர்களோ வியாஜ்யம் தொடர முடியுமா? முதல் மனைவியே வியாஜ்யம் செய்வதாயிருந்தாலும் எவ்வளவு தினத்திற்குள் செய்ய வேண்டும்? வியாஜ்யம் தொடர யாருக்கு உரிமை இருக்கிறது?

**பதில்:** சென்னை இந்து பலதாரத் தடைச் சட்டப்படி முதல் மனைவி இருக்கும் போது இரண்டாவது திருமணம் செய்து கொள்ளுவது ஒரு கிரிமினல் குற்றமாகும். முதல் மனைவி சம்மதித்தாலும் குற்றம் குற்றம் தான். ஆனால் பந்துக்களோ, போலீஸ் அதிகாரிகளோ மற்றவர்களோ கிரிமினல் வழக்குத் தொடர முடியாது. இரண்டாவது திருமணத்தால் துன்பமடைந்த முதல் மனைவி கிரிமினல் வழக்குத் தொடரலாம். இதற்குக் காலாவதி கெடுக் கிடையாது.

(பலதாரத் தடைச் சட்டம் செக்ஷன் 4; இந்தியன் பீனல் கோடு செக்ஷன் 494-495; கிரிமினல் புரொஸீஜர் கோடு செக்ஷன் 198.)

## இந்துவின் சுய சம்பாத்தியச் சொத்துக்கள்

80. **கேள்வி:** (அட்சயம் — வேலூர்) ஒரு இந்து குடும்பத்தைச் சேர்ந்தவர் சுயார்ஜிதமாய்ச் சம்பாதித்த சொத்துக்களை வயது வந்த ஆண்கள் வார்சு இருக்க வேறு ஒருவருக்கு அவருடைய இஷ்டப்படி எழுதி வைக்கலாமா? ஷை இந்துவுக்குச் சிறிதளவு பூர்வீக சொத்து இருக்கிறது. வார்சுகளுக்கு எவைகளில் பாத்தியம் உண்டு?

**பதில்:** ஒரு இந்துவுக்குக் குடும்பச் சொத்தைத் தவிர தனி சுயார்ஜிதச் சொத்துக்களும் இருக்கலாம். இச் சுய சம்பாத்தியச் சொத்தில், அவருடைய ஆண்மக்களுக்கு, அவர் உள்ளவரையில் எவ்வித உரிமையும் கிடையாது. சுய சம்பாத்திய சொத்தை அவர் இஷ்டப்படி யாருக்கும் எழுதி வைக்கலாம். இதை ஆட்சேபிக்க அவருடைய ஆண்மக்களுக்குப் பாத்தியமில்லை. ஆனால் வேறு ஒரு தினுசாகச் சிக்கல் ஏற்படலாம். அதாவது ஒருவர் சுயமாகச் சம்பாதித்த சொத்துக்களில் தனி உரிமை கொண்டாடும் எண்ணமில்லாமல், அவைகளையும் அவர் குடும்பச் சொத்துக்களுடன் சேர்த்து விட்டால், அச் சுய சம்பாத்தியச் சொத்துக்களும் குடும்பப் பொதுச் சொத்தாகிவிடும். அப்படியானால் அச் சொத்தில் அவருடைய ஆண் மகனுக்கும் உரிமை உண்டு. அவ்விதம் மாற்றப்பட்ட சொத்தைத் தகப்பன் இஷ்டம் போல் யாருக்கும் இனமாகக்

கொடுத்து விட முடியாது. குடும்பப் பொதுச் சொத்துக்களை எந்தச் சந்தர்ப்பங்களில் தகப்பன் பாதீனம் செய்யலாமோ அப்படியேதான் இச் சொத்தையும் அவர் பாதீனம் செய்யலாம்.

## பஞ்சாயத்தார் முன்னிலையில் பதிவுத் திருமணம்

81. கேள்வி: (பாண்டியன்—வடக்கன்குளம்.) ஒரு பஞ்சாயத்தில், பஞ்சாயத்தார் முன்னிலையில் பதிவுத் திருமணம் செய்து கொள்வது சட்டபூர்வமாக செல்லுபடியாகுமா?

பதில்: செல்லுபடியாகாது, பதிவுத்திருமணம் செய்து கொள்ளுவதைப்பற்றி ஒரு தனிச் சட்டம் இருக்கிறது. அச் சட்டத்தில் கண்டமுறைப்படி அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரியின் முன்னிலையில் திருமணத்தைத் தம்பதிகள் இருவரும் பதிவு செய்து கொள்ளுவதற்குத் தான் பதிவுத் திருமணம் என்று பெயர்.

## குழந்தை பிறந்து இரண்டு வருடங்கள் வரை ஜனனப் பதிவு செய்து கொள்ளா விட்டால், பிறகு பதிய வைப்பது எப்படி

82. கேள்வி: (ராதாகிருஷ்ண செட்டியார்—குழந்தை பிறந்து இரண்டு வருடம் 6 மாதமாகிறது. தவறுதலால் ஜனன பதிவு செய்ய விட்டுப் போய் விட்டது. இப்பொழுது ஜனன பதிவு செய்ய என்ன செய்ய வேண்டும். யாருக்கு மனுச் செய்ய வேண்டும்? சட்டனம் விகிதம் ஏதாவது உண்டா?

பதில்: சென்னை ஜனன மரணப் பதிவுச் சட்ட விதி 11 (2) ன்படி, குழந்தை பிறந்து ஒரு வருடத்திற்குள் பதிவு செய்யத் தவறி விட்டால், அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள இரண்டாம் வகுப்புக்குக் குறையாத அந்தஸ்துள்ள மாஜிஸ்ட்ரேட்டிடம் மனுக் கொடுக்கவேண்டும். மாஜிஸ்ட்ரேட்டானவர் கிராமத் தலைவர், அல்லது சுகாதார இன்ஸ்பெக்டர், அல்லது பஞ்சாயத்துத் தலைவர் இவர்களில் யாரையாவது விசாரணை செய்தும், வேறு விசாரணை செய்ய வேண்டி இருந்தாலும் செய்தும், மனுவில் குறிப்பிட்ட தேதியில் குழந்தை பிறந்ததென்றும், அது வரை அதைப் பதிவு செய்யவில்லை என்றும் அவர் அபிப்பிராயப்பட்டால், அதை ஜனன ரிஜிஸ்டரில் பதிவு செய்யும்படி உத்தரவிடுவார். அவ்வுத்தரவை அனுசரித்து ஜனன ரிஜிஸ்டரில் பதிவு செய்யப்படும்.

83: கேள்வி: (சீனிவாசன்—சேலம்) ஒரு கிராமத்தில் பஞ்சாயத்தின் ஆதிக்கத்தில் நூல் நிலையம் (லைப்ரரி) இருக்கின்றது. அதே கிராமத்தில் அரசாங்கத்திற்கு மாறு பட்ட கொள்கை உள்ள "சங்கம்" ஆரம்பித்து அதன் மூலம் நூல் நிலையம் ஏற்படுத்த முயன்றால் அரசாங்க உதவி பெறமுடியுமா? நூல் நிலையம் ஏற்படுத்த யாருக்கு மனுச் செய்து கொள்ள வேண்டும்?

பதில்: "லைப்ரரி" அல்லது நூல் நிலையங்களைப் பர்றி ஒரு தனிச் சட்டம் இருக்கிறது. இது தான் 1948-ஆம் வருடத்திய சென்னைப் பொது நூல் நிலையச் சட்டம். (Madras Public Libraries Act-1948) இச் சட்ட ஷரத்துக்களை அனுசரித்து, சர்க்காரால் விதிகள் இயற்றப் பட்டிருக்கின்றன. (14-3-1950 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட் ரூல் சப்ளிமெண்ட் பாகம் IB பக்கம் 19 பார்க்கவும்.) பிறகு இவ்விதிகளில் சில திருத்தங்களும் ஏற்பட்டிருக்கின்றன, எவ்விதம் அமைக்கப்பட்டு நடத்தப்பட்டு வரும் நூல் நிலையங்களுக்குச் சர்க்கார் உதவி கொடுக்கப்படு மென்று விதிகள் 17 முதல் 22 வரை கூறுகின்றன. சர்க்கார் உதவி விரும்பும் நூல் நிலைய நிர்வாகிகள் இவ்விதிகளை நன்றாகக் கவனித்து, சர்க்கார் உதவி கேட்க வேண்டும். சர்க்கார் உதவி கேட்கும் நூல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் முதல் தொகை முதலியவை இருக்க வேண்டும். டைரெக்டரால் அங்கீகரிக்கப் பட்ட சங்கத்தால் அது நிர்வாகம் செய்யப்பட வேண்டும். சர்க்கார் உதவி பெற டைரெக்டர் ஆப்பப்ளிக் லைப்ரரீஸ் (Director of Public Libraries) என்ற அதிகாரிக்கு மனுச் செய்ய வேண்டும்.

## பலதாரத் தடைச் சட்டம்

84. கேள்வி: (சந்தா நி. S. 107) முதல் மனைவியின் சம்மதத்தின் பேரில் ஒருவர் விவாக ரத்துப் பெறாமலேயே இரண்டாவது கல்யாணம் செய்து கொள்ளப் பிரயத்தனப் பட்டால் அதை அதிகாரிகள் தடுக்க முடியுமா? விவாகம் செய்து கொண்ட பின் மூன்றாவது மனிதர்களோ சர்க்காரோ கிரிமினல் நடவடிக்கை எடுக்க முடியுமா.

பதில்: அவ்விதம் செய்து கொள்ளும் இரண்டாவது கலியாணம் செல்லாது. அத்துடன் அது ஒரு கிரிமினல் குற்றமாகும். ஆனால் அப்படிச் செய்வதை அதிகாரிகள் தடுக்க முடியாது. விவாகம் செய்து கொண்ட பின்பும் மூன்றாவது மனிதர்களோ சர்க்காரோ கிரிமினல் நடவடிக்கை எடுக்கச் சட்டமில்லை.

## அயல் நாட்டில் ஏற்பட்ட கடன்

85. கேள்வி: (நடேச பிள்ளை - சென்னிய நல்லூர்) மலாயாவில் ஒரு கூட்டுத் தொழில்

நடத்தி அந்தத் தொழிலில் கஷ்டம் ஏற்பட்டு, கடன்களைக் கொடுக்க இயலாமல் ஷை தொழில் முதலாளிகளில் ஒருவர் இந்தியாவுக்குத் தம் சொந்த ஊருக்கு வந்து விட்டார். இந்தியாவில் சொத்தும் கொஞ்சம் இருக்கிறது. ஆகையால் மலாயாவில் கொடுக்கவேண்டிய கடன் பாக்கிக்கு இந்தியாவில் வசூல் செய்யச் சுதந்திர இந்தியாவில் இடமளிக்கிறதா?

பதில்: இந்தியாவுக்குத் திரும்பி வந்த இந்தியப் பிரஜையானவர் மலேயாவில் கொடுக்க வேண்டிய பாக்கிக்கு, இந்தியாவில் அவர்மீது தாவா செய்து டிக்ரி வாங்கிக் கடனை வசூல் செய்ய இந்தியச் சட்டம் இடமளிக்கின்றது.

## பாகத்தில் கிடைத்த பூர்விகச் சொத்தைப் பற்றி உயில்

86. கேள்வி: (முத்து - கருப்பள்ளம்.) இந்து ஒருவர் தாம் இறப்பதற்குச் சில வருடங்கள் முன்பு தமது சொத்துக்களைத் தமது மூன்றாவது தாரத்திற்கு உயில் எழுதி ரிஜிஸ்தர் செய்து இறந்து விட்டார். முதல், இரண்டாவது மனைவி கள் உயிருடன் இல்லை. முதல் தாரத்தின் மகன் வயிற்றுப் பேரப்பிள்ளை இருப்பதாகக் கேள்வி. இரண்டாவது தாரத்திற்கு இரண்டு பெண் பிள்ளைகள். மூன்றாவது தாரத்திற்கு சந்ததி கிடையாது. அவருடைய உயிலில் ஏக கலியாணம் மூன்றாவது மனைவி மட்டும் என்று எழுதியுள்ளார். அவருடைய இரண்டாவது தாரத்தின் இரு பெண்களும் (விவாகமானவர் கள்) தகப்பனாரின் சொத்தில் எங்களுக்கும் பாத்யதை உண்டு என்று பாகம் கேட்கின்றனர். ஷை சொத்து பூர்வீக சொத்தில் அவருக்கு கிடைத்த பாகம். ஷை சொத்தில் உயில் பிரகாரம் மூன்றாவது மனைவிக்கு மட்டும் உரிமையா அல்லது இரண்டாவது தாரத்தின் பெண் மக்களுக்கா, முதல் தாரத்தின் பேரப்பிள்ளைக்கா, அல்லது எல்லோருக்குமா?

பதில்: இறந்த இந்து எழுதி வைத்த உயில் படி சொத்துக்களை மூன்றாவது தாரமனைவியே அடைவாள். முதல் தாரத்தின் பேரப்பிள்ளைக் கோ, இரண்டாம் தாரத்தின் பெண் மக்களுக் கோ, எவ்விதப் பாத்தியமும் ஏற்படாது. ஆண் மகனில்லாத இந்துவிடம் இருக்கும் சொத்து பூர்வீக சொத்தில் அவருக்குக் கிடைத்த பாக பாக இருந்தாலும் அவருக்கு உயில் எழுத உரிமை உண்டு.

## கடன் ஒத்திவைப்புச் சட்டம் கடனாளி மோசடியாகச் சொத்தைக் கிரயம் செய்தால்

78. கேள்வி: (முத்துசாமி உடையார்—தொளார்) ஒரு விவசாயி பிராமிசரி நோட்டு மூலம் ரூ. 1000 வரைக் கடன் வாங்கியிருக்கிறார். விவசாயிகள் கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை வைத்து மோசக் கருத்துடன் அவ் விவசாயி தம்முடைய பெயரிலுள்ள சொத்தைக் கிரயம் செய்கிறார். மேற்படிக் கிரயத்தில் தம் கடனைக் காண்பிக்காமல் அவர் கிரயம் செய்தால் அந்தக் கிரயம் செல்லுபடியாகுமா? அப்படிச் செல்லுபடியானால் பிராமிசரி நோட்டு மூலம் கடன் கொடுத்த நபர் எப்படி வசூல் செய்ய முடியும்?

பதில்: இவ்விதம் செய்யப்பட்ட கிரயசாசன மானது கடன்காரர்களை மோசம் செய்யும் கெட்ட எண்ணத்துடன் செய்யப்பட்டதாக முத லெடுப்பில் பாவிக்கப்படும். (கடன் பட்ட விவசாயிகள் தாற்காலிக நிவாரணச் சட்டம். செக்ஷன் 6) அதாவது எந்த வழக்கிலாவது வேறு நடவடிக்கைகளிலாவது கடனாளி மேற் கண்ட தடை காலத்தில் செய்திருக்கும் கிரய சாசனமானது செல்லுமா, செல்லாதா, என்ற பிரச்னை ஏற்பட்டால், அது செல்லாதென்றே முதலில் பாவிக்கப்படும். ஆனாலும் அவ்வித கெட்ட எண்ணத்துடன் அக் கிரயசாசனம் ஏற்படவில்லை என்று கடனாளியோ சொத்து வாங்கியவரோ ருசுப்பிக்கவும் ருசுப்பிக்கலாம்.

## விற்பனை வரி—வெளிராஜ்யத்திற்குச் சரக்கு அனுப்பினால்

88. கேள்வி: (பாட்சா சாகிப்—திருச்சி) திருச்சி வியாபாரி ஒருவர் 1953—54 வருடத்தில் திருவாங்கூர் ஸ்டேட் ஆல்வாய் என்ற ஊரில் ஒரு ஆசாமிக்குச் சரக்கு விற்றிருக்கிறார். அவர் கொடுத்த ஆர்டருக்குச் சரக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. ஷை யாரின் காரியஸ்தரும் திருச்சிக்கும் நேரில் வந்து சரக்கு வாங்கி இருக்கிறார். திருச்சி வியாபாரி பில்லில் விற்பனை வரி போட்டு வாங்கவில்லை. திருச்சி வியாபாரியின் மொத்த 'டர்ன் ஓவரி'ல் ஆல் வாய்க்கு விற்ற சரக்குக்கு வரியைக் கழித்துக் கொண்டு பாக்கித் தொகைக்கு A 3 ரிடர்னில் வரி கட்டிவந்திருக்கிறார்.

ஆல்வாய்க்கு விற்றத்தொகைக்கு திருவாங்கூர் ஸ்டேட்டில் வரி கேட்டால் திருச்சி வியாபாரி வரி கொடுக்கவேண்டுமோ? அப்படிச் சட்டம் இருக்கிறதா?

பதில்: சமீபத்தில் அளிக்கப்பட்ட சுப்ரீம் கோர்ட்டாரின் தீர்ப்புப்படி திருச்சி வியாபாரி திருவாங்கூர் ராஜ்யத்திற்கு விற்பனை வரி செலுத்தக் கடமைப் பட்டவர்.

சென்ற இதழ் தொடர்ச்சி

# கூட்டுறவுச் சட்டமும் விதிகளும்.

K. ஸ்ரீநிவாஸன், M. A.

(தஞ்சை ஹூட் கூட்டுறவுப் பயிற்சிக் கழக விரிவுரையாளர்.)

### பொதுநல-பண்டு: அதற்குப் பணம் எப்படி கிடைக்கிறது? அதை எந்தக் காரியங்களுக்குச் செலவழிக்கலாம்?

பொதுநல பண்டு என்பது சங்கங்கள் தங்களை லாப்படி ஏற்படுத்திக்கொள்ளும் ஒரு நிதி. இதன் தொகை சங்கத்தின் வருஷாந்தர லாபத்திலிருந்து பெறப்படுகிறது. செக்ஷன் 35 க்ஷேமநிதிக்கு ஒதுக்கிய 25% லாபம் போக, மிகுதியிலிருந்து 10 சதவிகிதத்திற்கு அதிகப்படாத தொகையை சங்கம் தரும காரியங்களுக்குச் செலவழிக்கலாம் என்று கூறுகிறது. செலவழிக்கப்படும் தர்ம காரியம், தர்மஸ்தாபன சட்டம் (Act VI of 1890) படி இருக்கவேண்டும். அதாவது, கல்வி, சுகாதாரம், பொதுஜன நலமான அபிவிருத்தி, ஏழைகள் கஷ்டநிவர்த்தி முதலியவை.

### ஆடிட் (Audit)

ஆடிட் என்பது கணக்குகளின் தணிக்கை. பிரதி கூட்டுறவுச் சங்கத்தின் கணக்கையும் வருஷம் ஒரு முறையாவது ரிஜிஸ்தரார் தானாகவோ அல்லது அவரிடம் அதிகாரம் பெற்றவரைக்கொண்டோ தணிக்கை செய்யவேண்டும் என்று செக்ஷன் 37 ல் கூறப்பட்டுள்ளது. ஆகவே, ஆடிட் என்பது ரிஜிஸ்தரார் மீது ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு சட்டரீதியான கடமையாகும்.

### சங்கத்தைத் தணிக்கை செய்பவர் எந்தெந்த விஷயங்களைக் கவனித்து ரிப்போர்ட்டு செய்யவேண்டும்?

ஆடிட்டர்கள் எவை எவைகளைக் கவனிக்கவேண்டுமென்றும், அவைகளை எப்படி ஆடிட்டர்கள் செய்து முடிக்கவேண்டுமென்றும், அவை கோவாபரேட்டிவ் மான்யூல் விவரித்துள்ளது. ஆனாலும், கூட்டுறவுச் சங்கங்கள் விஷயத்தில் குறைந்த பக்ஷமாக எது செய்யப்படவேண்டுமென்பது 37 வது செக்ஷன் 2 வது பிரிவில் குறிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஆடிட்டர் சங்கக் கணக்குகளைப் பார்ப்பதுடன், சங்கத்திற்கு வரவேண்டிய கடன்கள், கையிருப்பு, ரொக்கம் பத்திரங்கள், இதர ஆஸ்திகள் பொறுப்புக்களையும் சோதிக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ரூல் V படி சங்கம் வைக்கும்படி கோரப்பட்டுள்ள ஒவ்வொரு கணக்கையும் ஆடிட்டர் தவறாமல் தணிக்கை செய்யவேண்டும்.

### சங்கத்தைத் திறமையாக ஆடிட் செய்யத் தணிக்கையாளர் அதிகாரங்கள்.

சாதாரணமாக, ஆடிட் சமயத்தில் சங்க நிர்வாகிகள் சங்க நலன் கருதி ஆடிட்டருக்கு எல்லா உதவிகளையும் செய்வார்கள். அப்படி அவர்கள் செய்யாத சந்தர்ப்பத்திலும் ஆடிட்டர் சங்கத்திற்குச் சென்று எல்லா வேலை நேரங்களிலும், சங்கக் கணக்குகள், பத்திரங்கள், ரொக்கம் இதர ஆஸ்திகளைப் பார்க்கவும், அவைகளை வைத்திருப்பவர்களுக்கு சம்மன் பிறப்பித்து அவைகளை ஆஜர் செய்யும்படி கோரவும் செக்ஷன் 37 [3] படி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சம்மன்படி அழைக்கப்பட்டவர் ஆஜராகி, கோரிய தகவல்களை அளிக்கத் தவறினாலும், தவறான தகவல்களைக் கொடுத்தாலும் அவை செக்ஷன் 52 படி குற்றமாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

### சங்கங்கள் வைக்கவேண்டிய கணக்குகள். அவைகளை வைக்காவிட்டால் என்ன?

சங்கங்கள் அவசியமான எல்லா கணக்குகளையும் தவறாமல் வைக்கவேண்டும். கணக்குகளைச் சரிவர வைக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது சங்க நிர்வாகஸ்தர்களின் முக்கியமான கடமைகளுள் ஒன்று.

எந்தெந்தக் கணக்குகளை சங்கங்கள் வைக்கவேண்டும் என்ற விபரம் ரூல் 5ல் கூறப்பட்டுள்ளது. அதன்படி பிரதி கூட்டுறவுச் சங்கமும்.

A. 1. மீட்டிங்கு புஸ்தகம் [மினிட்] புஸ்தகம், 2. மெம்பர்கள் சேர்க்கை [அட்மிஷன்] புஸ்தகம், 3. தினசரி வரவு செலவுச் சிட்டை, 4. ரசீது, 5. வவுச்சர்பட்டி, 6. பெயரேடு, 7. மெம்பர்கள் டிவிடெண்டு புஸ்தகம் முதலியவைகளை வைக்கவேண்டும். மேலும்,

நாணயச் சங்கங்கள் a. மெம்பர்கள் கடன் பெயரேடு, b. சங்கம் வாங்கிய கடன்கள் டிபாசிட்டுகளின் பெயரேடு, c. மெம்பர்கள் கடன் ஜாமீன் பொறுப்புகளைக் காட்டும் புஸ்தகம் இவைகளை வைக்கவேண்டும். கிராம-நாணயச்

சங்கங்கள் மெம்பர்களின் ஆஸ்தி-பொறுப்பு ஸ்டேட்மெண்டு புஸ்தகமும் வைக்கவேண்டும்.

ஸ்டோர் சங்கங்களும் உற்பத்திச் சங்கங்களும A பிரிவில் சொன்ன புஸ்தகங்கள் தவிர, கீழே குறித்தவைகளையும் வைக்கவேண்டும்.

a. கொள்முதல் சிட்டை, b. சரக்குகள் பெயரேடு, c. விற்பனைப் பட்டியல், d. விற்றுமுதல் சிட்டை, e. மெம்பர்கள் வாங்கிய அல்லது உற்பத்தி செய்த சரக்கு விவரம்.

சூபர்வைசிங் யூனியன், மத்திய பாங்கிகள் வைக்கவேண்டிய புத்தகங்களும் மேற்படி விதியில் கூறப்பட்டுள்ளன.

கணக்குகளை முறையாக வைக்கவேண்டியது சங்க நிர்வாகஸ்தர்களின் கடமை. அதை அவர்கள் செய்யத்தவறினல்:

1. ரிஜிஸ்தரார் Va படி சங்கத்தை எழுத்து மூலமாக உடனே கணக்குகளை எழுதும்படி கோரலாம்.

2. பின்பும் எழுதாமலிருக்கும் சக்கத்தின் கணக்குகளை அவர் ஒரு அதிகாரியைக் கொண்டு எழுதுவித்து அந்த அதிகாரிக்கான செலவைச் சங்கத்திலிருந்து வசூலிக்கலாம். மேலும்

3. கணக்குகள் எழுதப்படாததற்குக் காரணமான நிர்வாகஸ்தர்களை மாற்றி வேறு நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யலாம்; அல்லது செக்ஷன் 43 படி பூரா, நிர்வாகஸ்தர்களையும் நீக்கிவிடலாம்.

### ஆடிட், இன்ஸ்பெக்ஷன், என்குயரி.

ஆடிட் [Audit] என்பது ரிஜிஸ்ரார் அல்லது அவர் அனுமதி பெற்ற ஒருவர் கூட்டுறவுச் சங்கத்தின் கணக்குகளை, செக்ஷன் 37 படி தணிக்கை செய்வது. இதன் நோக்கம் சங்கத்தின் ஆஸ்தி பொறுப்புகளை நோட்டம் பார்த்து. பிரிவினை செய்யக்கூடிய நிகர லாபத்தைத் நிர்மானிப்பது. ஆடிட் பிரதி வருஷமும் செய்யப்படும். ஆடிட்டரின் அதிகாரங்கள் ஏற்கனவே கூறப்பட்டுள்ளன.

என்குயரி [Enquiry] என்பது செக்ஷன் 38 படி ரிஜிஸ்ட்ரார் தாமாகவோ அல்லது தாது சிப்பந்தி மூலமோ ஒரு சங்கத்தின் நிர்வாக முறை, நிதி நிலைமையை விசாரித்து அறிவது. ரிஜிஸ்ட்ரார் இந்த விசாரணையை தாம் இஷ்டப்பட்டபொழுது நடத்தலாம். பிரதேச கலக்டர் கேட்டுக்கொண்டாலும், சங்க பஞ்சாயத்தார்களில் மெஜாரிட்டி அல்லது அங்கத்தினர்களில் மூன்றில் ஒரு பங்கு கோரிக்கொண்டாலும், கட்டாயம் செய்யவேண்டும். இதைத் திறமையாகச் செய்ய அவசியமான அதிகாரங்கள் விசாரணை அதிகாரிகளுக்கு 38 [2] படி கொடுக்கப்பட்டுள்ளன. இந்த விசாரணை செய்பவர் சங்கக் கணக்குகள் தஸ்தாவேஜுகளைப் பார்க்கவும், நபர்களைச் சம்மன் செய்து விசாரிக்கவும், அவசியம்போல் சங்க மகாசபையைக் கூட்டவும் செய்யலாம். விசாரணையின் முடிவை ரிஜிஸ்த்ரார் விசாரணையைக் கோரியவர்களுக்கும் மத்திய பாங்கிக்கும் தெரிவிப்பார்.

இன்ஸ்பெக்ஷன் (Inspection) என்பது என்குயரி ஆடிட்டுக்கு மாறுபட்டது. ஆடிட் பிரதி வருஷமும் செய்யப்படுவது. 38-வது செக்ஷன் படி செய்யப்படும் விசாரணை சங்கத்தின் எல்லா அம்சங்களையும் பற்றியது. இன்ஸ்பெக்ஷன் என்பது சங்கத்தில் பணம் போட்டவர் கேட்டுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் மட்டும் செய்யப்படுவது. பணம் போட்டவர் தமது பணம் வாய்தா கடந்த பிற்பாடும், தாம் கேட்டும் கொடுபடவில்லை என்றிருந்தால்மட்டும்இந்த 39ஆவது செக்ஷன்படி விசாரணையைக் கோரலாம். அப்படிக் கோருபவர் விசாரணையின் உத்தேசச் செலவை ரிஜிஸ்த்ரார் கோரும் வகையில் முன்னடியாக டிபாசிட் செய்யவேண்டும். விசாரணை பூர்த்தியானதும் முடிவு, மனுதாரருக்குத் தெரிவிக்கப்படும். இப்படி இன்ஸ்பெக்ஷனைக் கோரும் உரிமை டிபாசிட்டர்களுக்கு ஒரு முக்கிய பாதுகாப்பாய் உள்ளது.

### என்குயரி இன்ஸ்பெக்ஷன் என்பவை ரிஜிஸ்த்ராரால் கட்டணமின்றிச் செய்யப்படுமா?

செக்ஷன் 38 படி செய்யப்படும் என்குயரி செக்ஷன் 39படி செய்யப்படும் இன்ஸ்பெக்ஷன் செலவுகளை ரிஜிஸ்த்ரார் நியாயம்போல் மனுதார் அல்லது சங்கம் அல்லது சங்க உத்தியோகஸ்தர்கள் இவர்களிடமிருந்து இஷ்ட விகிதப்படி வசூலிக்கலாம். விசாரணைச் செலவை ரிஜிஸ்த்ரார் கோரிய காலத்திற்குள் பார்ட்டிகள் கட்டத் தவறினல், அது ரிவினியு (கிஸ்தி) பாக்கிபோல் அமல் செய்யப்பட்டு வசூலிக்கப்படும்.

### ரிஜிஸ்த்ரார் தம் இஷ்டம்போல் ஒரு சங்கத்தின்நிர்வாகஸ்தர்களை [Supersede] சூப்பர்சீட் செய்து பதவியிலிருந்து நீக்க முடியுமா?

செக்ஷன் 43[1] படி ரிஜிஸ்திரார் ஒரு சங்கத்தின் நிர்வாகஸ்தர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்துவரவில்லையென்று கருதினல் அவர் அந்த நிர்வாகஸ்தர்களைப் பதவியிலிருந்து நீக்கி சூபர்சீட் செய்து வேறு ஒரு தனி நபரை அல்லது நபர்களை (இவர் மெம்பர் அல்லது மற்றவராகவும் இருக்கலாம்) சங்கத்தின் காரியங்களைக் கவனித்து வரும்படி நியமிக்கலாம்.

ஆனல், ரிஜிஸ்த்ரார் அப்படிச் செய்யுமுன்பு நிர்வாகஸ்தர்களுக்கு அது விஷயமாகத் தெரிவித்து அவர்கள் ஆட்சேபணைகளை அறியவேண்டும். ரிஜிஸ்த்ராரால் நியமிக்கப்படும் நிர்வாகஸ்தர் முதலில் இரண்டு வருஷ காலத்திற்கு அதிகப்படாமல் நியமிக்கப்படுவார். அவரை ரிஜிஸ்த்ரார் மேற்கொண்டு இரண்டுவருஷ காலம்வரை உசிதப்போல் பதவியில் நீடிக்கலாம்.

இந்த நிர்வாகஸ்தரின் சம்பளத்தை ரிஜிஸ்த்ரார் தீர்மானித்து அதை (F. 8104 36 படி) அவர் சங்கத்திடமிருந்து வசூலித்த நிர்வாகஸ்தருக்குப் பட்டுவாடா செய்யலாம்.

18773

**செக்ஷன் 43 (1) படி ரிஜிஸ்த்ராரால் நியமிக்கப்படும் நிர்வாகஸ்தரின் உரிமைகளும் கடமைகளும்.**

ரிஜிஸ்த்ராரால் நியமிக்கப்படும் சங்க நிர்வாகஸ்தருக்குப் பதவியிலிருந்து நீக்கப்பட்ட கமிட்டி வகித்த எல்லா அதிகாரங்களும் உண்டு. அவர் அவைகளை ரிஜிஸ்த்ராரின் கட்டளைகளுக்குட்பட்டுச் சங்கத்தின் க்ஷேமத்திற்கு உபயோகிப்பார். அவசியமான செலவுகளைச் செய்து சங்கத்தின் தாவாக்களையும். வசூலையும், இதர காரியங்களையும் கவனிப்பார்.

நிர்வாகஸ்தர் தமது பதவிக்காலம் முடியுமுன்பு சங்கத்தின் மகாசபையைக்கூட்டி பைலாப்படி நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அது சாத்தியமில்லாத சந்தர்ப்பத்தில் அவர் அந்தத் தகவலை காரணங்களுடன் விளக்கி ரிஜிஸ்த்ராருக்கு எழுதிவிட வேண்டும்.

**ஒரு சங்கத்தின் நிர்வாகஸ்தர்களை நீக்கி (சூபர்சீட் செய்து) செக்ஷன் 43 (1) படி ஒரு நிர்வாகியை நியமிக்குமுன்பு ரிஜிஸ்த்ரார் கலக்கவேண்டியவர்கள்.**

சங்கங்களுக்குப் பணம் கொடுக்கும் ஒரு மத்திய பாங்கியின் நிர்வாகிகளை நீக்குமுன்பு ரிஜிஸ்த்ரார் மாகாண பாங்கியைக் கலக்க வேண்டும்; ஒரு மத்திய பாங்கியில் கடன் வாங்கியுள்ள சங்கத்தின் நிர்வாகிகளை நீக்குமுன்பு அவர் அந்த மத்திய பாங்கியைக் கலந்துகொள்ளவேண்டும் என்று செக்ஷன் 43 [5] கூறுகிறது.

ரிஜிஸ்திரார் கலந்துகொள்ள வேண்டுமே அன்றி கலக்கப்பட்டவர்களின் யோசனைப்படி நடக்கவேண்டுமென்ற கட்டாயம் கிடையாது.

செக்ஷன் 43 [1] படி நிர்வகிக்கப்படும் சங்கத்தின் பதிவை ரிஜிஸ்திரார், எப்பொழுது வேண்டுமானாலும், ரத்துச்செய்து நிர்வாகியின் பதவியை முடித்து விடலாம்.

(தொடரும்)


# கூட்டுறவுச் சட்டமும் விதிகளும். வினா-விடை

ஆசிரியர்

**K. ஸ்ரீநிவாஸன் M. A.**

(தஞ்சை ஹூவெட் கூட்டுறவுப் பயிற்சிக் கழக விரிவுரையாளர்.)

1932ஆம் வருடத்திய கூட்டுறவுச் சட்டமும், 1934ஆம் வருடத்திய நில அடமான பாங்கிகள் பற்றிய சட்டமும் அவை சம்பந்தமான விதிகளும் வினா-விடை முறையில் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும், மெம்பர்களும் கட்டயமாக வைத்துக் கொள்ளவேண்டிய புத்தகங்களில் இதுவும் ஒன்று.

விலை ரூ. 1—8—0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

புத்தகம் கிடைக்குமிடம்:— K. சீனுவாசன் M. A.

ஹூவெட் கூட்டுறவுப் பயிற்சிக் கழகம், தஞ்சாவூர்.


PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVIDAIMARUDUR AND PUBLISHED BY, R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. Editor:—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.




மேனி அழகு மட்டும் இருந்தால் போதாது!
ஆடை அழகும் வேண்டும்!
ஆடை அழகு பெற

—: அறந்தாங்கி :—

# 786 சங்கு சோப்பை

**வாங்கி உபயோகியுங்கள்**

**கட்டி 1-க்கு அணா 0-1-3தான்**





தயாரிப்பவர்:-

இ. கா. ரு. மு. காதர் நயினா முகம்மது,
786 சங்கு சோப் ஒர்க்ஸ், அறந்தாங்கி S. Ry.

---

**நற்சான்று**




**K. S. N. பெரியதம்பி நாடார், பட்டிவீரன்பட்டி.**

**ஹெர்ணியா கியூர்:-** இம்மருந்தை 12-11-47ல் வரவழைத்து 27-12-47 முதல் 29-12-47 வரை 3 நாளும், 1-1-48 முதல் 3-1-48 வரை 3 நாளும் காலை மாலை இருவேளையுமாய் சாப்பிட்டதில் எனது வலது பக்கத்து விலாவரிச்சி எலும்புகளிலிருந்து வலியையும் குடல் வாதத்திற்காக 1929ல் வலப்பக்க மர்ம ஸ்தானத்தில் ஆப்ரேஷனாகி இருந்தும், இப்போது 2 வருஷமாக இருந்த குடலின் வலி, அண்டத்தின் பீஜவலி, இரைச்சல், எப்பம் முதலியவை குணமாகி திடமான பலத்தை அடைந்திருக்கிறேன். இத் தமிழ் மருந்தை உற்பத்தி செய்பவர் போற்றத்தக்க ஓர் சிறந்த வைத்தியரே. இதை நமக்கு கும்பகோணம் ஜெயராம் வைத்தியசாலையிலிருந்து கிடைக்கப்பெற்றோம்.

(ஒப்பம்) K. S. N. பெரியதம்பி நாடார்,
டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர்,
எக்ஸ் பிரசிடெண்ட், அய்யம்பாளையம் பஞ்சாயத்து போர்டு,
சேவுகம்பட்டி கிராம பஞ்சாயத்து கோர்ட்டு பிரசிடெண்ட்.

## 'ஜெயராம்' ஹெர்ணியா கியூர்

**குடல்வாத நிவாரணியை உபயோகியுங்கள்**

3-தினத்தில் குணம் தெரியும்

**எலிமெண்டரி கேஸ் ரூ. 6—0—0   செகண்டரி கேஸ் ரூ. 11—0—0**
**அட்வான்ஸ் கேஸ் ரூ. 25—0—0**

குறிப்பு:—ஆர்டருடன் முன்பணம் வரவேண்டும். (உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்)

**G. ஜெயராம் வைத்தியசாலை,**
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, :: கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ..

## கும்பகோணம்

REGISTERED TRADE MARK



பிராஞ்சு: (மன்னார்குடி.)

கூந்தலுக்கு வளர்ச்சியும் மூளைக்கு குளிர்ச்சியும் கொடுப்பதில் நிகர்...
சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், கோகுல் கூந்தல் தைலம்,
வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்,
பன்னீர், இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

*Sole Agents:*
For Madras
SURAJ AGENCIES,
MADRAS.

*For Coimbatore, Palghat & Nilgiris.*
B' BALAPATTABI CHETTIAR,
249, Vysyal Street.
COIMBATORE.